புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ௵ ஸெப்டம்பர் ௴ 23௳ [ந. 216

தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

**பின்லாந்து யுத்த நிறுத்த உடன்படிக்கைச் செய்துகொண்டது.**

**ரைன் நதிக்கு தெற்கிலுள்ள ஹாலந்து பூராவும் இரண்டு பாகமாய்ப் பிரிக்கப்பட்டது.**

**புலோன் நேசதேச வசமாயிற்று.**

## யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

—7-ம் பக்கம் பார்க்க.

பிரஸங்கம் **CCXVI.**

## ‘யுத்தத்தின் போக்கு.’

**புதுக்கோட்டை ஸமஸ்தான திவான் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம் அவர்கள் காரையூரில் 14—9—44௳ ஆற்றிய சொற்பொழிவு.**

மிஸ்ட்டர் சர்ச்சில் சொல்லுகிறபடி, நேசதேசப் படைகளின் முன்னால் ஜெர்மானிய, ஜப்பானிய சேனைகள் ஒவ்வோரிடத்திலும் உருண்டு வீழ்கின்றன என்பதே யுத்தத்தின் இப்போதைய நிலைமை.

2. சென்ற சில வாரங்களில், ஏன், நாட்களிலும்தான், யுத்தத்தின் முழுப்போக்கும் எல்லா முன்னணிகளிலும் மாறிவிட்டதென்று சொன்னால் அது மிகையாகாது.

3. பிரான்ஸில் நார்மண்டியில் யுத்தம் முடிந்துவிட்டதென்றும், தலைநகரான பாரிஸில் ஒரு பாகம் நேசதேசத்தார் கையில் சிக்கிவிட்டதென்றும் இரண்டு வாரங்களுக்குமுன் நம்மை நாம் பெருமைப்படுத்திக்கொண்டோம். இப்போது வடக்குக்கரையில் சாவதா, சரண் புகுவதா என்றறியாமல் சமாளித்துவரும் சில துறைமுகங்களைத் தவிர, பிரான்ஸ் முழுமையும் நேசதேசத்தார் கையிலோ அல்லது பிரான்ஸ் தேசத்து அபிமானிகளிடத்திலோ இருக்கிறது. பெல்ஜியத்திற்குள் முன்னேறி அதன் முக்கிய துறைமுகங்கள் உள்பட பெரும்பாகத்தை

V2:194:19(3/m) m,N34
N44



நேசதேசப்படைகள் விடுவித்துவிட்டன. ஹாலந்துக்குள்ளேயும் போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது.

4 ஜூன் மாதம் 6-ந்தேதிதான் நேசதேசப்படைகள் பிரான்ஸின் வடபாகத்தில் இறங்கினார்கள். இறங்கும் காலத்தில் ஆச்சரியப்படத்தக்கவிதமாக வெற்றி கிடைத்தது. பிற்பாடு, பருவ ஸ்திதியின் கெடுதலாலும், சில முனைகளில் ஜெர்மானியர் இடங்கொடுக்காது தாக்கி வந்ததாலும், கொஞ்சம் கொஞ்சமாகத்தான் முன்னேற இயன்றது. இப்போது ஜெர்மன் சேனைகள் முறியடிக்கப்பட்டு ஓடுகிறார்கள். நேசதேசத்தார்கள் ஜெர்மன் எல்லையை ஒட்டி வந்துவிட்டார்கள். சில இடங்களில் ஜெர்மன் பூமியிலேயே இப்பொழுது சண்டை போடுகிறார்கள். இவ்விடத்தில் ஸீக்பிரட் அரண் என்று சொல்லப்படும் மிக வல்லமையான பாதுகாப்புகள் நூற்றுக்கணக்கான மைல்கள் வரை அவர்களை எதிர்த்து நிற்கிறது. இந்த அரணை அவர்கள் எப்படி தாக்கப் போகிறார்கள் என்று கவனிப்பது விநோதமாயிருக்கும்.

69412

5. போன மாதத்தில் ஆகஸ்ட் 15-தேதியில்தான் நேசதேசத்தவர் பிரான்ஸின் தெற்குக் கரையில் இறங்கினார்கள். ருஷ்யர்களுக்கு ஈடான வேகத்தில் முன்னேறி, வடக்கேயுள்ள நேசதேசப்படைகளோடு அவர்கள் வெகுதூரமாய் சேர்ந்துகொண்டார்கள.

6. பிரான்ஸின் வடகரையையும், பெல்ஜியத்தின் கரையையும் கைப்பற்றிவிட்டபடியால் பறக்கும் வெடிகுண்டின் தொல்லை ஒழிந்துவிட்டது. இவைகளால், முக்கியமாய் லண்டனிலும் மற்ற இடங்களிலும், சொத்துக்கு அழிவும் 3,000 உயிர்ச்சேதமும் ஏற்பட்டு இருந்தது. இப்போது இங்கிலாந்து, விமானங்களால் தாக்கப்படாது அல்லது முன்போல் தாக்கப்படாது என்று நம்பப்படுகிறது. விளக்கவிப்பு இப்போது அநேகமாய் எடுக்கப்பட்டுவிட்டது. உள்நாட்டுப்பாதுகாப்பு,—அதாவது, குடிகளின் அணிவகுப்பு, நெருப்பு அவிப்பு, இந்த இயக்கங்களுக்கு ஏற்பட்டிருந்த நிர்ப்பந்தங்கள் தளர்ந்துவிட்டன.

7. வடபிரான்ஸூம், பெல்ஜியமும் கைவசமானபடியால், யூ-படகுகளுக்கு தளங்கள் தொலைந்துவிட்டபடியால், அவைகள் இப்பொது கவனிக்கப்படவேண்டிய அம்சமில்லை. சில நாட்களுக்குமுன், அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு இதுவரையில் இல்லாத பெரிய துணைக்காவல கப்பல்கள் எவ்வித தீங்குமில்லாமல் வந்துசேர்ந்தன.

8. இதாலியில் உலகத்தில் பெயர்பெற்ற முக்கிய நகரங்களில் ஒன்றாகவும் மர்மஸ்தானங்களில் முக்கியமானதுமான ரோமாபுரி தலைநகரை கைப்பற்றியபின் நேசதேசப்படைகள் வடக்கே ஏறி அங்கிருந்து 150 மைல் தூரத்திலுள்ள இதாலிய இரண்டாவது முக்கிய நகரமான பிளாரன்ஸைக் கைப்பற்றி இன்னும் இடைவிடாது வடமுகம் முன்னேறி வருகின்றன. பெரிய ஆல்ப்ஸ் மலைக்குச் செல்லுவதற்குமுன் நேசதேசப்படைகள் ஜெர்மனியின் கடைசி தற்காப்பு அரணான காதிக் அரணை 20 மைல் அகலத்திற்கு தகர்த்து விட்டார்கள். எனினும் ஜெர்மானியர் இளகுவிடாமல எதிர்த்து வருகிறார்கள்.

9. ஸ்டாலின்கிராடில் பாழாகத்தோல்வியுற்று ஏராளமான படைகளையும் தளவாடங்களையும் இழந்தபிறகு, ஜெர்மானியர் இடைவிடாமல் ஒவ்வொரு முனையிலும் பின்னுக்குத் துரத்தப்பட்டு ருஷ்யாவின் பூமியையேவிட்டு வெளிக்கிளம்ப நேரிட்டது உங்களுக்குத் தெரியும். வடக்கே, பின்லாந்தின் மீது புதிதாக படையெடுத்ததின் பயனாக ஜெர்மானியர்களை வெளியேற்றி விடுவதாக அவ்வூரார் ஒப்புக்கொண்டு ராசி செய்துகொள்ள நிபந்தனைகள் கேட்டிருக்கிறார்கள். மத்தியமுனையில், ருஷ்யர்கள் போலந்தின்மீது படையெடுத்து ஜெர்மானியர்களுக்கு ஏராளமான நஷ்டத்தை உண்டுபண்ணி— இந்த நஷ்டம் ஸ்டாலின்கிராடைவிட அதிக கேவலமானதென்று சொல்லப்படுகிறது. கிழக்குப் பிரஷ்யாவுக்கும், பெர்லினுக்கும் போகும் வழியில் நின்ற பலத்த கோட்டைகளைக் கைப்பற்றி, இப்போது கிழக்குப் பிரஷ்யாவில் சில நகரங்களை தாக்கி வருகிறார்கள். போலந்தின் தலைநகரான வார்ஸாவை ருஷ்யர்கள் முற்றுகை போட்டிருக்கிறதுமல்லாமல் அந்த நகரத்தில் தேசாபிமானிகள் மும்முரமாக சண்டை செய்து வருகிறார்கள். லித்வேனியாவின் தலைநகரமான காேனஸ் வீழ்ந்துவிட்டது.

10. தெற்கே ருமேனியா சரணடைந்து நேசதேசங்களோடு சேர்ந்துவிட்டது. ஜெர்மனிக்குக் கிடைத்த எண்ணெயில் மூன்றில் ஒரு பாகம் ருமேனியாவிலிருந்து வந்தது. அது இனிமேல் அவர்களுக்குக் கிடைக்காது.

11. ருஷ்யர்கள் பல்கேரியாவுக்குள் புகுந்தார்கள். அது உடனே சரணடைந்து ஜெர்மனியின் மீது யுத்தம் தொடுத்திருக்கிறது. யூகோஸ்லாவியாவில் தேசாபிமானிகளுக்கு நேசதேசத்தார் ஒத்தாசை செய்து வருவதில் ஜெர்மானியர் அத்தேசத்தைவிட்டு வெளியேறுகிறார்கள். கிரீஸில் இரண்டு லக்ஷம் ஜெர்மானியர் தனிப்படுத்தப்பட்டார்கள். ஸெகோஸ்லாவேக்கியாவில் பெரும்பாகம் விடுவிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

12. இப்போது ஹிட்லர் எத்தனை முனைகளில் யுத்தம் செய்யவேண்டியிருக்கிறதென்று சொல்லுவது அரிது. ஒரு பக்கத்திலிருந்து துருப்புகளையோ, ஆகாய விமானங்களையோ, டாங்கிகளையோ அவன் எடுத்தால் அதன்பலம் குறைந்துவிடுகிறது. அதோடு, மறு அடி எப்பக்கத்தில் விழுமென்று அவனுக்குத் தெரிவதில்லை. அவனுக்கு ஆள்பலம் குறைந்துவிட்டது. பிரான்ஸில் அவன் சேனைக்கு ஏராளமான சேதம். ருமேனிய முனையில் மட்டும் சில நாட்களுக்கு முன், 2,00,000 ஆட்களுக்குமேல் இழக்க நேரிட்டது. மேலும், பலவகை யுத்த தளவாடங்களில் ஏராளமான அளவு இழக்கவும் நேரிட்டது. எண்ணெய் கையிருப்பும் குறைந்துவிட்டது. ருமேனியாவிலிருந்து கிடைத்த எண்ணெயும்போய், நேசதேச விமான எதிர்ப்பின் காரணமாக உள்நாட்டு ரசாயன முறையில் செய்த உற்பத்தியும் பாதியாகிவிட்டது. இந்த எதிர்ப்பும் ஜாஸ்தியாகவே நடந்துவருகிறது.

13. ஜெர்மனியில் உள்நாட்டு நிலைமை மோசமாகிக்கொண்டுவருகிறது. ஹிட்லரைக் கொலைசெய்ய ஒரு முயற்சி ஏற்பட்டது. ஆனால் அது தவறிவிட்டது. சில தளகர்த்தர்கள் அவனுக்கு விரோதமாகச் சதிசெய்ததாகவும், அவனுடைய சேனையின் சில பகுதிகள் கலகம் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த விஷயங்கள் வெளிவரவில்லை. எட்டு தளகர்த்தர்கள் சுடப்பட்டார்கள். ருஷ்யாவில் கைதுசெய்யப்பட்ட ஒரு பெரிய ஜெர்மன் சேனாபதி செய்த ஒலிபரப்பில் ஹிட்லர் கைவசம் சேனைகளோ, தளவாடங்களோ இல்லையென்றும் யுத்தத்தில் அவனுக்கு தோல்வியேயென்றும் சொல்லியிருக்கிறார். ஏராளமான ஜெர்மானிய தளகர்த்தர்கள் நம கைவசம் பிடிபடுவதால் அவர்களுக்கும் அதேமனப்பான்மைதான் இருக்கிறதென்று சந்தேகப்படவேண்டியதாயிருக்கிறது.

14. இப்பொழுது ஜப்பானியரைக் கவனிப்போம். என்ன விரைவில் அவர்கள் பர்மா, மலேயா, டச்சுக்கிழக்கு இந்தியத்தீவுகளை பிடித்துக்கொண்டதும், இந்தியாவையும் நியூகினியிலிருந்தும் ஆஸ்திரேலியாவையும், அலூஷியனிலிருந்து அமெரிக்காவையும் அவர்கள் பயமுறுத்தினதும், தாய்லாந்தையும், பிரெஞ்சு இண்டோ-சைனாவையும் அவர்கள் தம் வசப்படுத்தினதும் உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்த விரசுப்போக்கெல்லாம் இப்போது பழங்கதையாயிற்று. இந்தியாவைப் படையெடுத்துவிடுவதாக ஜோராகப் பேசிக்கொண்டு, அஸ்ஸாம் மாகாணத்தில் அவர்கள் மணிப்பூரை எதிர்த்தது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அவர்கள் பூராவாக முறியடிக்கப்பட்டுவிட்டார்கள். கரடுமுரடான பிரதேசத்தின் சிரமத்தினாலும், பருவகாலத்தின கொடுமையினாலும் மிகவும் கஷ்டப்பட்டு நமது துருப்புகள் ஜப்பானியர்களை அஸ்ஸாமை விட்டுத்துரத்தியடித்ததும் அல்லாமல், இப்பொழுது அவைகள் பர்மா எல்லைச் சரகத்தைக் கடந்து கொஞ்சதூரம் முன்னேறி விட்டார்கள். இந்தியாவின் சமவெளிகளில் முன்னேறுவார்களோ என்ற பயம் எதுவும் இருந்தாலும் அதுவும் இப்பொழுது அற்றுப்போய் விட்டது.

15. பர்மாவிலும் அந்த தேசத்தின் அமைப்பினால் ஏற்படும் கஷ்டங்களால் விரைவாக முன்னேற முடியாவிட்டாலும் நேசதேசப்படைகள் உள்நாட்டிற்குள் இடைவிடாது முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஓர் முனையில் இப்போது 110 மைல்கள் முன்னேறியிருக்கிறார்கள். மிட்கினா என்ற தற்காப்பு நிலயம் ஜப்பானின் ஒரு மாத தற்காப்புக்குப் பின் விழுந்துவிட்டது. வடக்கிலிருந்து இறங்கும் சீனர்களுக்கும் பர்மாவிலுள்ள நேசப்படைகளுக்கும் இடையில் இப்பொழுது வெகுதூரமில்லை. அவர்கள் இருவரும் சேர்ந்து பர்மா ரோடைத் திறந்து சீனாவுக்கு சாமான்கள் கொண்டுபோக வழி ஏற்படுத்துவார்கள் என்று நம்பப்படுகிறது. அந்த ரோடின் ஒரு பாகத்தை இப்பொழுது விடுவித்திருக்கிறார்கள். அரக்கானில் நேசதேசப் படைகள் ஒரு புதிய போர்முனை ஆரம்பித்திருக்கிறார்கள். அஸ்ஸாமிலும், பர்மாவிலும் நடந்த யுத்தத்தில் இந்திய விமானப்படை மகா உன்னதமாகப் போர் புரிந்திருக்கிறது.

16. பஸிபிக்கிலோ, ஜப்பானியர்களை ஒரு தீவுக்கூட்டத்திலிருந்து மற்றொன்றுக்கு அமெரிக்கர்களும், ஆஸ்திரேலியர்களும் இரக்கமின்றி துரத்திவருகிறார்கள். ஜப்பான் மீது வெடிகுண்டு போடுவதற்கு தளமாக உபயோகப்படக்கூடிய சில தீவுகளில் நேசதேசப் படைகள் இறங்கிவிட்டார்கள். அமெரிக்கர்களிடமிருந்து ஜப்பானியர் கைப்பற்றிய குவாம் என்ற தீவுக்கோட்டையை நேசதேசப்படைகள் கைப்பற்றிவிட்டன. ஜப்பானில் டோக்கியோ தலைநகரமும், நாகஸாகியும், மற்ற முக்கிய நகரங்களும் வெடிகுண்டால் தாக்கப்பட்டிருக்கின்றன. மஞ்சூரியாவிலும் சில இடங்கள் தாக்கப்பட்டுவிட்டன. இதுதான் ஆரம்பம். ஜெர்மனியைப் போலவே, ஜப்பானும் வெடிகுண்டுகளால் நொருக்கப்படும். ஜப்பானிய விமானப்படை சங்கையிலும், தரத்திலும் நேசதேசப்படையைவிட இழிவானது. நமக்கு ஒரு விமானம் நஷ்டமென்றால் ஜப்பான் 13 விமானங்களை இழந்துவிடுகிறது. அவர்களின் கப்பற்படைக்கும், வியாபாரக் கப்பல்களுக்கும் இன்னும் வல்லமை இருக்கிறதென்றாலும்

அவைகள் கால்முறிக்கப்பட்டு கிடக்கின்றன. ஜப்பானின் வியாபாரக் கப்பல்களில் பாதியோ, மூன்றிலொன்றோ அழிக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. சமீபத்தில் பிலிப்பைன் தீவில் கூட்டமாய் வந்துகொண்டிருந்த ஜப்பானுக்குச் சொந்தமான 52 கப்பல்களும், 68 ஆகாய விமானங்களும் நாசம் செய்யப்பட்டன. அவர்களின் கப்பல்களின் சங்கியை குறைவினால் மலேயாவிலும், டச்சுக் கிழக்கு இந்தியத் தீவிலும் மற்ற இடங்களிலுமுள்ள மகத்தான ஜப்பானியப் படைகள் துணிக்கப்பட்டுவிட்டன. அவைகள் சிறிது காலத்திற்குள் சரண் புகுந்துவிடும் அல்லது அழிக்கப்பட்டுவிடும். ஜப்பானின் நிலைமை சரியாக இல்லையென்பதற்கு பிரதம மந்திரி டோஜோவும், அவருடைய நிர்வாக சபையும் கலைக்கப்பட்டு புது நபர்கள் வந்திருப்பது ஒரு அறிகுறியாகும். ஸயாமிலும் நிர்வாக சபை ராஜீநாமா செய்துவிட்டது.

17. யூ-படகுகளின் செய்தி என்ன? ஒரு காலத்தில் இவை நமக்கு மிகக் கவலையைக் கொடுத்தன. இப்போது அப்படியில்லை. இப்பொழுது யூ-படகுகளினால் ஏற்படும் நஷ்டம் மிகவும் சொற்பம். சகலவித சாமான்களும் இங்கிலாந்தில் வந்து குவிவதையோ அல்லது இங்கிலாந்திலிருந்து ருஷ்யாவிற்குப் போவதையோ அல்லது நார்மண்டியில் நேசதேசப் படைகள் இறங்குவதையோ இந்த யூ-படகுகள் தடுக்க முடியவில்லை. ஏற்கனவே நான் சொன்னதுபோல பிரான்ஸ், பெல்ஜியம் வடக்குக் கடற்கரையிலுள்ள யூ-படகு தளங்களைக் கைப்பற்றிவிட்டோம். யூ-படகுகளின் நடவடிக்கையினாலும் கொள்ளைக் கப்பல்களின் நடவடிக்கையினாலும் நமக்கு ஏற்பட்ட நஷ்டங்களையும் ஈடு செய்துவிட்டோம். இப்பொழுது ஜெர்மன கொள்ளைக்கப்பல்களே கிடையாது. 1944-ம் வருஷம் ஜூலை மாதம் முடிய அமெரிக்கா மட்டும் 1,000 சாமான் கப்பல்களையும் அநேக யுத்தக் கப்பல்களையும் கட்டி முடித்திருக்கிறது.

18. பிரிடனுக்காக போராட்டம் நடந்த காலத்தில் பிரிடனைக் காப்பாற்றின நமது விமானப்படையும் அமெரிக்க விமானப்படையும் இப்போது மிகப் பெரிதாக வளர்ந்து, சமயங்களில் 4,000 எண்ணிக்கை வரை எட்டக்கூடிய கூட்டங்களாகச் சென்று ஜெர்மனியின் நகரங்களிலும் ஐரோப்பாவில் அச்சுநாடுகளின் வசமான பாகங்களிலும் உள்ள கைத்தொழிற்சாலைகளையும் போக்குவரத்து சாதனங்களையும், சர்பராக் குவியல்களையும் ஓய்ச்சல் ஒழிவில்லாமல் நொருக்கிக்கொண்டு வருகின்றன. ஜூலை மாதத்தில் மட்டும் பிரிடிஷ் விமானப்படை 57,500 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளை ஜெர்மனி பேரில் வீசின. போக்குவரத்து சாதனங்களை தவிடுபொடியாக்கி பிரான்ஸை படையெடுப்புக்குத் தயார்படுத்தவேண்டியது. அவர்களுடைய அலுவல்களிலொன்று. இதை அவைகள் சரியாகச் செய்தன. ஐரோப்பாவில் அச்சுநாட்டு வசமான பாகங்களை நம்முடைய விமானங்கள் இப்போது இங்கிலாந்திலிருந்தும், இதாலியிலிருந்தும் தாக்கமுடியும். கிழக்குப் பிரஷ்யாவிலுள்ள முக்கியமான ஸ்தானங்களின்மீது வெடிகுண்டுகளை வீசுவதின் மூலமாக நம் விமானப் படை ருஷ்யாவுக்கு உதவியளித்து வருகிறது. மேலும், ருமேனியாவில் ஜெர்மானியர்களுடன் போர் புரியும் ருமேனியப்படைகளுக்கும் அது பேருதவி செய்து வருகிறது.

19. ஜெர்மனியின் பாதுகாப்பு நிலயங்களின்மீது பறந்து சென்று அவைகளை ஓயாமல் அழித்துக்கொண்டுவரும் ருஷ்ய விமானப்படையின் செயல்களையும் நாம் மறக்கக்கூடாது. எதிரி கைவசப்படுத்திக்கொண்ட நாடுகளிலுள்ள தேசாபிமானிகளின் வேலைகளையும் நாம் மறக்கக்கூடாது. அவ்வேலைகள் பாரிஸின் வீழ்ச்சிக்கும், பிரான்ஸின் பெரும் பாகத்தின் விடுதலைக்கும் சாதகமளித்தன. அதுபோலவேதான் பெல்ஜியம், யூகோஸ்லேவியா, போலந்து இவைகளிலும். வார்ஸாவின் கலகநடவடிக்கையைப்பற்றி முன்னமேயே சொன்னேன். ஆக்கிரமிக்கப்பட்ட தேசங்கள் ஒவ்வொன்றிலும் ஜெர்மானியர்கள் தேசாபிமானிகளை எதிர்த்துப் போராடவேண்டியிருக்கிறது.

20. இதாலியிலும், பிரான்ஸிலும் நேசதேசப் படைகளை விரித்த கையுடன் வரவேற்பது நமக்கு பெரிய சாதகமாகும். மற்ற இடங்களிலும் இப்படியே வரவேற்கப்படுவார்கள். ஜெர்மானியரோ நெஞ்சொடிந்த ஜனங்களையும கிழறுப்பானக வேலை செய்துவரும் ஜனங்களையும், விஷமிகளையும் சமாளித்து நிற்கவேண்டியிருக்கிறது. ஜெர்மானியரையும் அவர்களுக்கு நேசமான ஜப்பானியரையும் பகைத்து வெறுக்காத தேசமில்லை. யுத்தத்தில் ஒரே முடிவுதான். நேசதேச வெற்றி என்று நடுநிலைமை வகிக்கும் நாடுகளும், ஜெர்மன் அமுலுக்குட்பட்ட நாடுகளும் அறிந்துவிட்டன. ஜெர்மனியுடன் ஏற்பட்டிருந்த எல்லா உறவையும் துருக்கி ரத்து செய்துவிட்டது. ஸ்வீடன் ஜெர்மனிக்குப் பொருளை ஏற்றுமதி செய்வதை நிறுத்திவிட்டது. ருமேனியாவும், பல்கேரியாவும் சரணடைந்துவிட்டன வென்று ஏற்கனவே சொன்னேன். ஹங்கேரியும் சரணடையலாம். ஆனால் நிச்சயமாக சொல்லமுடியாது. ருஷ்யப் படைகள் ஹங்கேரிக்குள் புகுந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

21. எதிர்காலம் இவ்வளவு பிரகாசமாக இதற்குமுன் இருந்ததேயில்லை. இப்போது சிலகாலமாய் நேசதேசங்களுக்கு இடைவிடாது தொடர்ச்சியாய் வெற்றி கிடைத்துவருகிறது. எதிரிகள் எங்குபார்த்தாலும் தற்காப்பு செய்வதாயும் பின்வாங்குவதாயும் இருந்து வருகின்றனர். நேசதேசங்கள் 16,450 லக்ஷம ஜனத்தொகையை உடையனவென்றும் அச்சுநாடுகள் 2,280 லக்ஷம் ஜனத்தொகையுடையனவென்பதையும் மறந்துவிடக்கூடாது. அவர்களைப் போல் நாம் எட்டுப்பங்கு ஜனத்தொகையைக் கொண்டவர்கள். ஆனால் ஜெர்மனியும், ஜப்பானும் லேசில உடைக்கக்கூடிய பாக்குகள் இல்லை. ஆகவே யுத்தத்தில் வெற்றி கிடைத்துவிட்டதென்று இப்பொழுது சொல்லிவிடமுடியாது. அதைப்பற்றி இனிக் கவலை வேண்டாமென்று எண்ணுதீர்கள். போர்முனையில் உள்ளவர்களுக்குக் கடும்போரும், வீட்டில் உள்ளவர்களுக்கு தங்கலம மறுத்தலும் இருந்தேதீரும். சொற்ப அபஜயங்கள் ஏற்படலாம். நாம் நினைத்தபடியெல்லாம் நடக்காமலிருக்கலாம். ஆனால் முடிவில் நமக்கு வெற்றி நிச்சயம். நேசதேசக் கக்ஷியின் நோக்கங்களைப் பூர்த்தி செய்து வைப்பதில் நாம் ஒவ்வொருவரும் நமது கடமைகளைச் செய்துகொண்டே வருவோமாக. விஷமப் பிரசாரங்களையும், அநியாய லாபம் சம்பாதிப்பதையும், சேமித்து வைத்தலையும் நாம் ஒவ்வொருவரும் அடக்க முயற்சி எடுக்கவேண்டும். இவற்றை பொது ஜனங்கள்தான் அடக்க முடியும் பொதுஜன ஒத்துழைப்பில்லாமல் சில உத்தியோகஸ்தர்கள் மட்டும் என்ன செய்ய முடியும்? உணவுப் பொருள்கள் உற்பத்தியைப் பெருக்கலாம். அதிக உணவுப் பொருள்களை உண்டாக்குவதில் நாமெடுத்த முயற்சிக்கு ஸமஸ்தானத்தில் நல்ல பலன் கிடைத்திருக்கிறது. சென்ற பஸலிக்கு முந்தின இரண்டு பஸலியிலும் 47,000 ஏக்கர்களும், சென்ற பஸலியில் 6,000 ஏக்கர்களும் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. யுத்தக் கடன் பத்திரங்களும், ஸேவிங்ஸ் சர்டிபிகேட்டிலும் உங்கள் பணத்தைப் போட்டு வைக்கலாம். இதிலும் நமது ஸமஸ்தானத்தில் திருப்தியான அளவு நடந்திருக்கிறது. இப்போது வெளியிடப்படும் சிறு சேமிப்பு நிதியை உங்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளும்படி சிபார்சு செய்கிறேன். தேசீய யுத்த முன்னணியில அதைப்பற்றி விவரமாகச் சொல்லுவார்கள். அந்த நிதியும் நன்ருய் வளர்ந்து ஸமஸ்தான ஜனங்கள் அதில 40,000 ரூபாய்க்குமேல் போட்டிருக்கிருர்கள். உங்களுடைய சொந்த செலவில் நீங்கள் செட்டாய் இருக்கவேண்டும். கலியாணங்களிலும் இவைபோன்ற மற்ற வைபவங்களிலும் ஆடம்பரச் செலவு செய்ய இது காலமல்ல. லாடங்களையும், தள்ளுபடி காகிதங்களையும் பொறுக்கிக்கூட நீங்கள் யுத்தத்திற்கு உதவி செய்யலாம். அப்படி உதவி புரிபவர்களுக்கு ஸர்க்காரில் பணம் கொடுக்கிருர்கள். வேறு உதவி ஒன்றும் செய்யாவிட்டாலும் காலம் கெட்டிருக்கும் சமயத்திலும் சந்தோஷமாயிருந்தால் போதுமானது. இதை விட்டுவிட்டு தன் காரியமே பெரிதென்று நினைப்பவர்களாயினும் இப்போது உங்கள் பணத்தைச் செலவு செய்தால் சாமான் விலைமிகுதியால் பணத்திற்கு சரியான பொருமதி கிடையாது. பணத்தை இப்போது சேமித்துவைத்து வட்டிக்கு போட்டு, யுத்தத்திற்குப் பிறகு செலவு செய்தால் உங்களிடத்தில் அதிகபணம் இருக்கும். அந்தப் பணத்திற்கும் அதிகப்பொருள் வாங்கலாம். இவ்வழிகள் ஒவ்வொன்றிலும் நம்மில் ஒவ்வொருவரும் ஏதேனும் எவ்வளவு அற்பமாயினும் செய்யலாம். அவ்விதம் செய்தால் எந்த வெற்றியும் அமைதியும் கிடைக்கவேண்டுமென்று நாமெல்லோரும் விரும்பித் துதித்து வருகிரேமோ, அந்த வெற்றியும், அமைதியும் விரைவில் வந்துசேரும்.

---

## பிரிடனுக்காக நடந்த விமானப்போரில் வெற்றிபெற்ற தின விழா.

***1944-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 17-ம் தேதியன்று புதுக்கோட்டை ஸமஸ்தான இரண்டாவது கௌன்ஸிலரான மிஸ்ட்டர் M. பரமசிவம் பிள்ளை அவர்கள், B. A., B. L., ஆற்றிய சொற்பொழிவு.***

**சீமாட்டிகளே! சீமான்களே!!**

நாம் இன்று இங்கு பிரிடனுக்காக நடைபெற்ற விமானப்போரில் வெற்றி பெற்ற தினத்தைக்கொண்டாடக் குழுமியிருக்கிரேம். இந்தப் போரை சரித்திரத்தில் புகழ்பெற்ற மாராதான், டிரபால்கர், மாான் நதிப்போர்களுடன் ஒப்பிடலாம். மேலும் பிரிடனை அப்பொழுது தற்காப்பு செய்த வீரர்களின் தீரத்தையும், சகிப்புத் தன்மையையும் பாராட்டவும் நன்றி அறிவை வெளிப்படுத்தவும் இங்கு கூடியிருக்கிரேம். அன்புடன் பாராட்டி வந்த பிரிடனின் மன்னர், தேசம், நிர்வாகம், ஸ்வதந்திரம் முதலியவைகளுக்குப் பேராபத்து ஏற்பட்ட சமயத்தில் விமானிகள் அதைரியப்படாமல் எதிரியின் ஏராளமான விமானக் கூட்டங்களை எதிர்த்துப் போராடி தைரியத்துடனும், ஊக்கத்துடனும எதிரிகளுக்கு விமானங்களும், விமானிகளும் ஏராளமாக நஷ்டமாகும்படி செய்துவிட்டார்கள். இந்த நஷ்டத்துப் பின் பிரிடிஷ் மக்களின் மன உறுதியைக் குலைத்துவிடுவதென்ற எண்ணத்தை எதிரி விட்டுவிட்டான்

அத்துடன் இங்கிலாந்தின் பேரில் படையெடுப்பதென்ற எண்ணமும் பயன்படாதென்றும் அவன் கண்டு கொண்டான்.

2. 1940-ம் வருஷ வேனிற் காலத்தில் ஐரோப்பிய நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக வெறி பிடித்த ஹிட்லரின் ஆதீனத்துக்குட்பட்டனவென்பது எல்லோருக்கும் ஞாபகம் வரும். அவனுடைய அயோக்கியத்தனமும், ரத்த வெறி பிடித்ததுமான கொள்ளைக்கூட்டத்தார்கள் சுயேச்சையையும், ஸ்வதந்திரத்தையும் நசுக்கிவிட்டார்கள். நிராயுதபாணிகளாகவும் ஸ்வதந்திரம் பெற்றிருந்ததுமான ஐரோப்பாவில் அஞ்சக்கூடிய ஜெர்மன் ரகசியப் போலீஸைச் சேர்ந்த கொலைபாதகர்களான வேலைக்காரர்கள் யதேச்சையாகத் திரிந்து வந்தார்கள். பிரான்ஸ் விழுந்துவிட்டது. பிரிடன் தனித்து நின்றது. அதன் முடிவும் கிட்டி விடுமென்று எல்லோரும் நினைத்தார்கள். லண்டனில் பவனி வருவதற்காக ஹிட்லர் தேதியையும் குறிப்பிட்டுவிட்டான். வானத்தில் அபாரமான மேகங்கள் தோன்றிவிட்டன. நிலைமை மோசமாகயிருந்தது. ஆகிலும் வானத்தில் ஒரு மின்னல் தோன்றிற்று. அஞ்சா நெஞ்சமும், தீரமும், விடாப்பிடிப்பும் உறுதியான சாவதானமான விடாமுயற்சியும் அவதாரமெடுத்ததுபோல் வின்ஸ்டன் சர்ச்சில் கிளம்பினார். பிரிடனின் திலகம் போன்ற இவர் சதா காலமும் வாயில் சுருட்டுடன் நின்றுகொண்டு, வரப்போகும் பேராபத்துக்கு இடிதாங்கி போலத் தன்னுடைய அலுவல்களைக் கவனித்து வந்தார். அவருடைய புனிதமான திடமுள்ள வார்த்தைகள் உத்சாகத்தையும், தீரத்தையும், மன உறுதியையும், தைரியத்தையும், லக்ஷியத்தில் விடாப்பிடிப்பையும் பீதியின்மையையும் வளர்ச்சி செய்ததால் பிரபுக்களும், சாதாரண ஜனங்களும், பொது ஜனங்களும் ராணுவமும் மனோதைரியம் பெற்று அச்சமயத்தில் தங்களுடைய அலுவல்களைச் செய்யவும் சகலவிதமான கஷ்டங்களை அனுபவிக்கவும் முன் வந்தார்கள்.

3. படைகளை இறக்கு முன் மின்னல் தாக்குதல் மூலம் ஆகாய ஆதிக்கம் பெறுவதென்ற திண்ணமான லக்ஷியத்துடன் ஆரம்பிக்கப்பட்ட பிரிடனுக்கான விமானப் போர் 1940-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 8-ம் தேதியன்று ஆரம்பமாயிற்று. அன்று வைட் தீவுக்கருகில் சாமான் கப்பல் கூட்டத்தை காலையில் 60 ஜெர்மன் விமானங்களும், மத்தியான காலத்தில் 100 விமானங்களும் தாக்கின. மூன்று நாளைக்குப் பின் ஜெர்மன் விமானங்கள் டோவர், போர்ட்ஸ்மத், வைட் தீவு, துணைக்காவல் கப்பல்கள் முதலியவற்றைத் தாக்கின. நமது ஹரிகேன், ஸ்பிட்பையர், டிபையண்ட் விமானங்கள் திறமையுடன் போர் புரிந்து ஜெர்மன் யாங்கர், ஹிங்கல் டார்னியர், மெஸ்ஸர்ஸ்மிட் விமானங்களை, அழித்து வந்ததைக்கண்டு, அவைகளை அழிக்க ஜெர்மனி 800 வெடி விமானங்களையும் சண்டை விமானங்களையும் அனுப்பி வந்தது. நமது விமான தளங்கள் பேரிலும், நமது விமானிகள் பேரிலும் ஜெர்மனி ஏராளமான வெடி குண்டுகளைப் பொழிந்தது. அப்பொழுதிருந்த நிலைமையில் ஒவ்வொரு பிரிடிஷ் சண்டை விமானியும் அத்தியாவசியமானவனாகயிருந்தான். காலையில் குடைகள் மூலம் விமானிகள் இறங்கிய பின் பிற்பகலில், அவர்கள் மறுபடியும் விமானங்களை ஓட்டிச் செல்லவேண்டியிருந்தது. ஹரிகேன், ஸ்பிட்பையர் விமானங்கள் எதிரியின் வெடி குண்டுகளால் துளைக்கப்பட்டு விமான தளத்துக்கு வந்தபொழுது தொழிலாளிகள் இரவு பூராவும் ஒரு கவளம் ஆகாரத்தைக்கூட உட்கொள்ளாமலும், விமானங்களை விடியற் காலத்துக்குள் பழுது பார்த்தும் வந்தார்கள். அவர்கள் அழியாப் புகழ்பெற்று விட்டார்கள். நமது விமானிகள் எதிர்பாராத வண்ணம் அபாரமான நஷ்டத்தை விளைவிப்பதைக்கண்டு கோயரிங் ஸெப்டம்பர் 7-ம் தேதியன்று லண்டனையும், அதன் கப்பற் கட்டும் துறைகளையும், வீடுகளையும் அழிக்க 350 வெடி விமானங்களை அனுப்பினான். இந்தக் கொடுமை ஸெப்டம்பர், அக்டோபர் மாதம் பூராவும் நடந்தேறியது. முதலில் லண்டன் வாசிகள் அபாயச்சங்கு ஒலித்தவுடன் பதுங்குமிடங்களுக்குச் சென்றார்கள். பெரிய கடைகளும், போஸ்டாபீஸ்களும், பாங்கிகளும் வேலைகளை நிறுத்திவிட்டு வேலைக்காரர்களை பதுங்குமிடங்களுக்கு அனுப்பினார்கள். இவ்விதமாகக் காலத்தை வீணாக்குவது தவறென்று அவர்கள் பின்பு கண்டு கொண்டார்கள். ஆகாயத்தில் தோன்றும் வெண்மையான புகைகளையும், வெடிக்கும் குண்டுகளிலிருந்து கிளம்பும் புகையையும் பொருட்படுத்தாது தங்களுடைய அலுவல்களைக் கவனித்து வந்தார்கள்.

4. பின்பு தாக்குதலின் உச்ச நிலைமை ஏற்பட்டது. ஸெப்டம்பர் 15-ம் தேதி பிரிடனுக்கான முக்கியமான போர் நடந்தது. 250 வெடி விமானங்களையும், சண்டை விமானங்களையும் காலையிலும் பிற்பகலிலும் ஜெர்மனி அனுப்பியது. ஸ்வதந்திரமுள்ள ஜனங்கள் காட்டுமிராண்டிகளுடன் போர்தொடுத்தார்கள். அன்று நடந்த ஆகாயப்போர் மிகவும் சிலாக்கியமானதென்றும், வெற்றிகரமானதென்றும் அது வரையில் இவ்வளவு மகத்தான யுத்தம் நடைபெற்றதில்லையென்றும் மிஸ்டர் சர்ச்சில் சொன்னார். அதன் முடிவில் நியாயம் வெற்றிபெற்றது. அக்கிரமம் ஒழிந்தது. தீமை அழிந்தது. நன்மை பிழைத்து நின்றது. பிரிடனுக்கு வந்த 500 ஜெர்மன் விமானங்களில் அன்று மட்டும் 185 விமானங்கள்

அழிந்தன. பிரிடிஷ் விமானப் படைக்கு மகத்தான வெற்றி கிடைத்தது. அதற்குப் பின் ஜெர்மன் விமானப் படை கூட்டமாக பிரிடனின் பேரில் வட்டாரமிடவில்லை. பிரிடனைப் படையெடுக்க முற்போக்கான நடவடிக்கையைத் துவக்கவும் அது துணியவில்லை. 1940-ம் வருஷம் இலையுதிர் காலத்தில் ஏற்பட்ட வெற்றி நமக்குச் சுலபமாகக் கிடைக்கவில்லை. பிரிடிஷ் விமானப் படையைச் சேர்ந்த 375 விமானிகள் கொல்லப்பட்டார்கள். 358 பேர்கள் காயமடைந்தார்கள். "இறக்கும் வரையில் அவர்கள் தங்களுடைய ஊக்கத்தை விடவில்லை" என்ற புகழுரையை நாம் இந்த வீரர்களுக்கு சமர்ப்பிக்கிறோம்.

5. சீமாட்டிகளே! சீமான்களே இப்பொழுது யுத்தப்போக்கு நமக்கு சாதகமாக மாறிவிட்டது. முட்டாள்தனமாக ஹிட்லர் கிழக்கு ஐரோப்பாவில் போர் புரிந்து வந்த பொழுது அற்பமான பிரிடிஷ் விமானப்படை விருத்தியடைந்தது. இன்று அது மகத்தான படையாக ஆகி, ஜெர்மன் கடற் தளங்களையும், நீர்மூழ்கி கட்டும் நிலயங்களையும், வெடி மருந்து சாலைகளையும், எண்ணெய் கிட்டங்கிகளையும் பகலிரவாக 1,000, 2,000 விமானக் கூட்டமாகச் சென்று பலமாகத் தாக்கி அழித்து வருகின்றது. பிரிடனுக்கான போருக்குப் பின் தொடர்ச்சியாக நடைபெற்ற அட்லாண்டிக் கடல் போரிலும் பிரிடிஷ் விமானப் படை கீர்த்தியுடன் போர் புரிந்தது. ஜனாதிபதி ரூஸ்வெல்டுடன் கலந்து ஆலோசனை செய்ய மிஸ்டர் சர்ச்சில் இப்பொழுது க்யூபெக்குக்குச் சென்றிருக்கிறார். உலகத்தை ஆளுவதென்ற ஹிட்லரின் எண்ணம் நிறைவேறாதென்று எல்லோரும் அறிவோம். மறுபடியும் தலை தூக்காமல் ஜெர்மனியை நசுக்கி விடுவோம். ஜப்பானையும் பலமாக சிக்ஷிக்க இருதலைவர்களும் திட்டங்களை வகுத்து வருகிறார்கள். ஜப்பானும் கூடிய சீக்கிரத்தில் முறியடிக்கப்படும்.

6. பிரிடனுக்காக நடைபெற்ற ஆகாயப்போரில் கிடைத்த வெற்றிதான் இப்பொழுது துவக்கமாகியிருக்கும் ஜெர்மனிக்கான போருக்கு அடிப்படையானது. அந்த வெற்றிதான் பிரிடனையும் நாகரீகம் படைத்த சர்வ உலகத்தையும் அடிமைத்தனத்திலிருந்தும், நிபந்தனையிலிருந்தும் காப்பாற்றியிருக்கிறது. வெறும் பலாத்காரமும் மிருகத்தன்மையும், அக்கிரமப் போரும், கொள்ளையடிப்பும் எவ்விதத் தயாருமில்லாத ஸ்வதந்திர ஜனங்களின் அஞ்சா நெஞ்சமுள்ள ஊக்கத்தை முறியடித்துவிட முடியாதென்றும நீதி முறை, சன் மார்க்கத்தைப் பின் பற்றும் சக்திகளால் அடியோடு நிர்மூலமாக்கப்படுமென்றும் இந்த வெற்றி ஒரு படிப்பினையைக் கற்பித்துவிட்டது. நமது திவான் அவர்கள் பிரார்த்தனை செய்ய மாதாக் கோவிலுக்குச் சென்றிருக்கிறார். அது போல நாமும் தெய்வத்தினிடம் வழிப்படும்பொழுது பிரிடிஷ் விமானிகளின் தீரத்தையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். பாராசீன காலத்தில் தெர்மாபோலியில் போர் தொடுத்த 100 வீரர்களைப்போல, நமது விமானிகளும் பன்மடங்கு, அதிகமான எதிரிகளை எதிர்த்து மன்னரிடமும், தேசத்தினிடமும் அவர்களுக்கிருந்த வாஞ்சையினாலும் தங்களுடைய சுடும்பப் பெயரையும், கீர்த்தியையும் நிலை நாட்ட வேண்டுமென்ற எண்ணத்தினாலும் தங்களுடைய உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள். இப்பொழுது ஜெர்மனிக்குள்ளேயே கீர்த்தியுடன் போரைத் துவக்கியிருக்கும் அவர்களின் சந்ததியார்களுக்கு வெற்றி கூடிய சீக்கிரத்தில் கிடைக்கவேண்டுமென்று நாம் கடவுளை பிரார்த்திப்போமாக.

---

## யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

### 7. ஒத்துழைப்பு.

கமிட்டிகள் திட்டங்களை வகுத்துவரும்பொழுது நாம் ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பதா என்று இந்திய நிர்வாகத்தின் திட்ட அபிவிருத்தி அங்கத்தினரான ஸர். அர்தேஷீர் டலால் ஸெப்டம்பர் மாதம் 14-ம் தேதியன்று டில்லியில் நடைபெற்ற பத்திரிகாசிரியர்கள் மகாநாட்டில் வினவி, அதற்குப் பின்கண்ட பதிலையும் கொடுத்தார். "நம்முடைய திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவராவிட்டால் நாம் கெடுதலைச் செய்தவர்களாவோம். இவைகள் ஏட்டுச்சுரைக்காய்கள் இல்லை. இந்தத் திட்டங்கள் யுத்தத்திலிருந்து திரும்பிவரும் ஸோல்ஜர்களுக்காகத்தான் என்று எண்ணவேண்டாம்."

இந்தியாவில் அநேக திட்டங்கள் காணப்படுகின்றன. திட்டம் போடும் ஒவ்வொருவரும் உலகில் க்ஷேமமுண்டாகுமென்று உறுதிகூறுகிறார். அவர்களின் புத்திசாதுர்யம் மெச்சத் தக்கதாகிலும், குழப்பமான நிலைமையும் காணப்படுகிறது. எவ்வித நடவடிக்கையைத் துவக்குவது, எப்படி அதைக் கையாளுவதென்று திகைத்து நிற்கிறார்கள்.

சிலர் முதலில் பொருளைத் திரட்டவேண்டுமென்றும், சிலர் நிர்வாகத்தைத் திருத்தி அமைக்கவேண்டுமென்றும், சிலர் முதலாளித்வத்தை ஒழித்து ஜனசமூக சமத்வத்தை நிலைநாட்டவேண்டுமென்றும், விவசாயிகளின் கஷ்ட நிவாரணம் செய்யப்படவேண்டு

மென்றும், சொல்லுகிறார்கள். சிலர் விவசாய ஆராய்ச்சி, நீர்ப்பாசனம், மின்சார உற்பத்தி முதலியவைகளைக் கவனிக்க ஸ்தாபனங்களை அமைக்கவேண்டுமென்றும், மற்றும் சிலர் தொழிலபிவிருத்தி, தொழிற்சாலைகளைச் சீர்படுத்துவது, அவைகளைப் பரவலாக அமைப்பது சம்பந்தமாக திட்டங்களை நிறுவவேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஐந்துவருட திட்டங்கள் ருஷ்யாவில் வெற்றிகரமாக நிறைவேறியதால் நமது திட்டங்களும் பொதுமக்களின் கவனத்தைக் கவருகின்றன.

திட்டங்களும், யாதாஸ்துகளும் நிர்வாகம், பொதுஜன சமூகம், தனிப்பட்டவர்கள் முதலியவர்கள் அமுல்நடத்துவதற்கு அடிப்படையான எண்ணங்களாகும்.

தேசம் புத்துயிர்பெறும் இந்த சமயத்தில் ஒத்துழைப்பு அல்லது கூட்டுறவு அத்தியாவசியமாகும். இதன் மூலம் எல்லோருடைய ஒத்துழைப்பும் சித்திக்கும். இது அனுபவ சித்தமானது. நாடுகளிலும், நகரங்களிலும் இது நன்மையை விளைவித்திருக்கிறது.

துரதிருஷ்ட வசமாக இந்தியாவில் கூட்டுறவின் பூரா பிரயோஜனங்களும் ஏற்படவில்லை. இந்த இயக்கம் நகரங்களில்தான் வெற்றிகரமாக இருந்துவருகிறது. பழைய முறைப்படி கூட்டுறவு முறைகள் கடன் வாங்குவது, கடன் கொடுப்பதற்குத்தான் உபயோகப்படுகின்றன. அது பொது ஜனங்களின் பாங்கியே ஒழிய ஒத்துழைப்புள்ளதல்ல. மேலும் அவைகள் நாட்டுப்புறத்தார்களின் செல்வ நிலைமைப் பிரச்னையைத் தீர்த்துவிடவில்லை. இந்திய அரசாங்கத்தின் கல்வி, சுகாதாரம், பூமி இலாகாவின் மந்திரியான ஸர். ஜோகேந்திரஸிங்கும் இதே அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்.

மேனாட்டில் கூட்டுறவு முறைகள் கீழ்தர, நடுநிலைமை வகிக்கும் வகுப்புகளின் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்திருக்கிறது. கடன் கொடுப்பது, கடன் வாங்குவது அவைகளின் நடவடிக்கைகளில் ஒன்றாகும். கூட்டுறவு முறையில் உற்பத்தி, விநியோகம், விக்கிரயம் செய்வதின் மூலம் தனிப்பட்டவர்களின் செல்வ நிலைமையை அபிவிருத்தி செய்வதுதான் அவைகளின் முக்கியமான நோக்கங்கள். இதற்கு அனுகூலமான வரையில் பாங்கி அலுவல்களும் நடத்தப்படுகின்றன. பொருளாதார அபிவிருத்திதான் முக்கியமான லக்ஷியம். கூட்டுறவு சங்கங்கள் கடைகளையும் தொழிற்சாலைகளையும் அமைத்திருக்கின்றன. தனிப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தொகை சேமிக்கப்பட்டு விருத்தி செய்யப்படுகிறது. காலக்கிரமத்தில் சிக்கனமுறை பழக்கமாக மாறிவிடுகிறது. மெதுவாகவும் ஆனால் உறுதியுடனும் தேவை பிரச்னை தீர்க்கப்படுகிறது.

நாம் கனவு காணவில்லை. சென்ற ஜூலை மாதத்தில் சகாப்தத்தைக் கொண்டாடிய பிரிடிஷ் கூட்டுறவு சங்கம் ஆரம்பித்தபொழுது 22 அங்கத்தினர்கள் தானிருந்தார்கள். 1844-ம் வருஷத்தில் சந்தா மூலம் கிடைத்த 28 பவுன் மூலதனத்துடன் அவர்கள் ராக்டேவில் டோட் சந்தில் ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தார்கள். கடையில் 50-ராத்தல் வெண்ணெயும், 56 ராத்தல் சர்க்கரையும், 6 அந்தர் மாவும், 1 அந்தர் ஓட் மாவும், 2 டஜன் மெழுகுதிரிகளுந் தானிருந்தன.

இன்று அதில் 9 மிலியன் மெம்பர்களிருக்கிறார்கள். 1,000 சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கிலாந்தில் ஜனங்கள் உட்கொள்ளும் மூன்றில் ஒரு பங்கையும், பங்கீடு செய்யப்பட்டிருக்கும் சாமான்கள் நான்கில் ஒரு பாகத்தையும் அச்சங்கம் ஸப்ளை செய்துவருகிறது. அதற்கு 448 மிலியன் பவுன்கள் மூலதனமிருந்துவருகிறது. ஒரு வருஷத்தில் 1,000 பவுன் வியாபாரம் நடைபெறுகிறது.

இதைப் பின்பற்றித்தான் சர்வதேச ஒத்துழைப்பு ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவு மூலமாக விவசாயம், தொழில்முறைகள், வியாபாரம், சேவைகள், நகரம், நாடுகளிலுள்ள, வைத்திய வசதி, கால்நடை சிகிச்சை, கல்வி, முதலிய ஏற்பாடுகள் செய்யப்படலாம்.

இந்தியாவின் பாங்கிகள்தான் கூட்டுறவு முறையில் தோன்றியிருக்கின்றன. அநியாய வட்டியைக் குறைத்து, குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பதை அவைகள் ஆதரித்திருக்கின்றன. அவைகள் இன்னும் அதிக வேலைகளைச் செய்யவேண்டும். உற்பத்தி, சாப்பிடுகிறவர்கள், விநியோகம் செய்கிறவர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இவைகளை அமைப்பது மிகவும் சிரம சாத்தியமாகும். அவைகளைப் பயன்பட நடத்த விவசாயம், வியாபாரம், உற்பத்தி முதலியவைகளைப்பற்றிய அனுபோகம் பெற்றிருக்க வேண்டும், அனுபோகம் பயிற்சி மூலம்தான் ஏற்படும். இத்துறையில் ஆரம்பிக்கப்பட்ட முயற்சிகள் இகழ்ச்சி பெற்றுவிட்டன. ஆகையால்தான் அவைகளை மறுபடியும் ஆரம்பிப்பதில் தயக்கம் ஏற்படுகிறது.

யுத்த அவசியத்தை முன்னிட்டு அநேக விநியோக சங்கங்கள் தோன்றி, தகுதியான கண்காணிப்புடனும், கட்டுப்பாட்டுடனும் திறம்பட வேலைசெய்து வருகின்றன. சமாதானம் தோன்றியவுடன் இந்த உபயோகமுள்ள ஸ்தாபனம் மறைந்துவிடாதென்று நாம் நம்புகிறோம். இந்த ஸ்தாபனத்தை விஸ்தாரப்படுத்த இப்பொழுதே திட்டங்கள் போடப்பட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ராக்டேல் மூதாதிரியர்கள் விளக்கிக் காட்டியபடி மூலதனம் வேண்டியதில்லை. ஒத்துழைக்க வேண்டுமென்ற ஊக்கமும் நம்பிக்கையும்தான் அவசியமாகயிருக்கவேண்டும்.

கூட்டுறவுதான் ஜனநாயகத்தின் சிறிய கிளை. அதைச் சரியான முறையில் அமைத்தால் வாழ்க்கை முறையாகவும், தொழில் முறையாகவும் உபயோகப்படுத்தலாம். பொருளாதார முறையில் அது முதலாளித்வத்தை ஒழித்துவிடும்.

பம்பாயில் சமீப காலத்தில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்க ரிஜிஸ்தரார்களின் மகாநாட்டில் கூட்டுறவு ஸ்தாபனங்களை சில பிராந்தியங்களில் நிலைபெறும்படி கட்டாயப்படுத்தவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டது. இது வீண்பேச்சல்ல. பங்கீடு முறையைப்போல இதுவும் அனுபவ சித்தமானது.

கூட்டுறவு மூலம் ஏழ்மைத்தனமொழிந்து, வல்லமையுண்டாகுமென்று ஸர். ஜோகேந்திரனாத் சொல்லுவதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 13—9—44 (புதன்கிழமை). | நேச தேசப்படைகள் ஜெர்மனியில் ரோட்கனைப் பிடித்தன. |
| | நேசதேசப் படைகள் மோகங்க்—மாண்டலே ரஸ்தாவிலுள்ள ஹோபினைப் பிடித்தன. |
| 14—9—44 (வியாழக்கிழமை). | நேசதேசப் படைகள் ஸீக்பிரட் அரணைத் தாக்கின. |
| | செம்படை வார்ஸாவுக்குக் கிழக்கிலுள்ள பிராகாவைப் பிடித்தன. |
| | நேசதேசப் படைகள் பிலிப்பைன்ஸுக்குத் தெற்கிலுள்ள ஹால்மேஹாரத் தீவிலிறங்கின. |
| 15—9—44 (வெள்ளிக்கிழமை). | நேசதேசப் படைகள் பிலிப்பைன்ஸுக்குக் கிழக்கிலுள்ள பாலாத் தீவிலிறங்கின. |
| | பிரிடிஷ் படைகள் பெல்ஜியத்தில் ஆல்பெர்ட் கால்வாய் பிராந்தியத்திலிருந்து எதிரிகளைத் துறத்திவிட்டார்கள். |
| 16—9—44 (சனிக்கிழமை). | க்விபெக்கில் நடைபெற்ற ரூஸ்வெல்ட்-சர்ச்சில் சம்பாஷணை முடிந்தது. |
| | நேசதேசப் படைகள பஸிபிக்கில் ஆங்காரிலிறங்கின. |
| 17—9—44 (ஞாயிற்றுக்கிழமை.) | ஹாலந்தில் விமானமூலம் படைகளிறங்கின. |
| | சீனப்படைகள் பர்மா ரஸ்தாவிலுள்ள லவக்னிங் நகரத்தைப் பிடித்தன. |
| 18—9—44 (திங்கட்கிழமை). | ஹாலந்தில் விமானமூலமிறங்கிய படைகள் எயிண்ட்ஹோவனுக்கருகில் பிரிடிஷ் 2-வது சேனையுடன் தொடர்பு ஏற்படுத்தின. |
| 19—9—44 (செவ்வாய்க்கிழமை). | பிரிடிஷ் படைகள் எண்ட்ஹோவனை ஆக்கிரமித்துவிட்டு நிஜ்மேஜனுக்கு முன்னேறுகின்றன. |
| | செம்படை பால்டிக்கிலுள்ள ஜெர்மன் தற்காப்புகளை நொறுக்கிவிட்டது. |
| 20—9—44 (புதன்கிழமை.) | பிரெஸ்டும் பொலோனும் விழுந்தன. |
| | கோபன்ஹேகனிலும் மற்ற டேனிஷ் நகரங்களிலும் கலகம் உண்டாகிவிட்டது. |

## (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்கு ஐரோப்பா.**—17-ம் தேதியன்று நேசதேசப் படைகள் ஹாலந்திலுள்ள எயிண்ட் ஹோவன், டில்பர்க், நிஜமேஜன் முதலிய இடங்களில் இறங்கின. அவைகள் ரைன் நதியின் முகத்வாரத்திலிருக்கின்றன. பெல்ஜியத்திலிருந்து முன்னேறிவரும் பிரிடிஷ் இரண்டாவது சேனையைச் சேர்ந்த கவசம் பூண்ட படைகள் எயிண்ட்ஹோவனுக்கருகில் மற்ற படைகளுடன் தொடர்பு ஏற்படுத்திவிட்டன. ஆசன், டிரியர்ஸ், ஈபன் முதலிய இடத்திலும், மாஸ்ட்ரிக்ட், ப்ரம், லக்ஸம்பர்க், கருக்கில், முதலிய இடங்களில் ஜெர்மன் எல்லையைத் தாண்டிவிட்டன.

அடுத்த தாக்குதலைத் துவக்க லீக்பிரட் அரணை நேசதேசப் படைகள் பலமாகத் தாக்கி வருகின்றன. ஆல்பர்ட், லியோபால்ட், எஸ்கஸ் கால்வாய்களிலிருந்து எதிரி தூரத்தியடிக்கப்பட்டான். பெல்போர்ட் வெளியிலிருக்கும் நான்லியும், இதாலிய எல்லைச் சரகத்திலிருக்கும் மாடானியும் பிடிபட்டன. நேசதேச முற்றுகைக்குட்பட்ட கடற்கரை துறைமுகங்களில் லாஹாவரும், லாரகெல்லியமும் ஆக்கிரமிக்கப்பட்டன.

**ருஷ்யா.**—ஸெகோஸ்லேவாக்-போலிஷ் எல்லைச் சரகத்திலிருக்கும் லொம்சாவும் வார்ஸாவின் எல்லைப்புற நகரமான பிராகாவும் விழுந்து விட்டன. செம்படை ருஷ்யாவுக்குள் புகுந்துவிட்டன. பல்கேரியாவின் தலைநகரமான ஸோபியா விழுந்துவிட்டது. ஜெர்மனி பின்லாந்தைக் காலிசெய்து வருகிறது. எஸ்தோனியாவில் டார்டு என்ற இடத்தில் புதிய தாக்குதல் துவக்கமாகிவிட்டது.

**இதாலி.**—ரிமினிக்குத் தெற்கில் ஆறுமைல்களிலிருக்கும் கொரியானோ—ஸான்—சாரினோ குன்றினிலிருந்த எதிரிகள் துரத்தப்பட்டுவிட்டன. மாரானோ நதிக்குச் சமீபத்திலுள்ள செம்மானோவிலிருந்தும், மாண்டி டி கொலம்போவிலிருந்து ஜெர்மனியர்கள் துரத்தியடிக்கப்பட்டுவிட்டார்கள். நதியின் பிராந்தியமும் சுத்தி செய்யப்பட்டுவிட்டது. நதிக்கரையிலுள்ள காரியானோ, ஸான்லோரென்ஸோ—ஸ்ட்ராடாவும் பிடிபட்டன. 5-ம் படையைச் சேர்ந்த சேனைகள் ரிமினி விமான தளத்திற்கு வடமேற்கு மூலையில் ஊன்றிவிட்டன.

**பஸிபிக்.**—செபு நெக்ரோஸும், பானேத் தீவுகளும் தாக்கப்பட்டன.

அமெரிக்கப் படைகள் மொலுக்காஸிலுள்ள ஹாலமேஹாரத் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த மொரோடைத் தீவிலிறங்கின.

அமெரிக்க மாரின் படைகள் பாலாத் தீவுக்கூடத்தில் தெற்குக் கோடியிலுள்ள ஆங்கார்த்தீவை ஆக்கிரமித்தன. ஜப்பானியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த மிண்டானோ தீவிலுள்ள டாவோ துறைமுகத்தைக் காலிசெய்துவிட்டனர். நேசதேசப் படைகள் பாலாத்தீவிலும் ஆங்கார் தீவிலும் இறங்கிவிட்டன.

**பர்மா.**—டென்னசரிம் கடற்கரைக்கருகில் ரெங்கூனுக்குத் தெற்கில் நூறுமைல்கள் தூரத்தில் ஜப்பானிய சாமான் கப்பல் கூட்டம் வெற்றிகரமாகத் தாக்கப்பட்டது. வட பர்மாவிலுள்ள மோகாங்கிலிருந்து நேசதேசப் படைகள் மாண்டலேயை நோக்கி முன்னேறி ஹோபினைப் பிடித்தன.

ஸால்வின் போர் முனையிலுள்ள லங்க்சங்கையும், லங்க்லிங்கையும் சீனப் படைகள் ஆக்கிரமித்தன. 14-வது சேனை சின்ட்வின் நதியைத் தாண்டிவிட்டது. பர்மா ரஸ்தாவுக்கும் லெடோ ரஸ்தாவுக்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது.

---

### சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**10—9—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

(197 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 27 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—எதிரி விமான நிலயங்கள்—மேற்கு ஜெர்மனி (W. Germany).

விமான நிலயங்கள், டாங்கிகள், தொழிற்சாலைகள்.—ஸ்டட்கார்ட் (Stuttgart), உல்ம் (Ulm), நூரம்பர்க் (Nuremburg).

எண்ணெய் சுத்திகரிக்கும் சாலைகள்.—வியென்னவிற்கு தென் மேற்கு (S. W.)

எதிரி துருப்புகள்.—லாஹாவர் (Le Havre).

இரவு.—பேர்லின் (Berlin).

**இதாலி (Italy).**

ரயில் தளங்கள்.—டிரையெஸ்ட்டியின் (Trieste) வட கிழக்கு.

துருப்பு முகாம்கள், பீரங்கித் துறைகள் பாலங்கள்.—கோதிக் (Gothic) அரண்.

கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).
கப்பல்கள்.—அமோராங் (Amoerang) கடல் துறைமுகம்.—சைனாவில் உள்ள ஆமாய் (Amoy).
பஸிபிக்கிலுள்ள பாலா (Palau).
ஜப்பானிய சைனியங்கள்.—மார்ஷெய்ல்ஸ் (Marshalls), டிரக் (Truk), பக்கன் (Pagan) தீவுகள்.
எதிரி கப்பல்கள்.-டெனாஸரிம் (Tenasserim) கரை.
ரயில்வேப் பாலம்.-மாண்டலே (Mandalay) யின் தெற்கு.
இலக்குகள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu), டிடிம் (Tiddim) ரஸ்தா.

11—9—44. (திங்கட்கிழமை).
ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
(175 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 77 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
பகல்.—எண்ணெய்க் கிணறுகள்—மெர்ஸிபெர்க் (Merseburg), மிஸ்பெர்க் (Misberg).
இதர இலக்குகள்.—மத்திய ஜெர்மனி (Central Germany).
எண்ணெய்க்கிணறு ஸ்தாபனங்கள்.—காஸ்ட்ராப் ராக்ஸெல் (Castrop Rauxel), காமென் (Kamen), நாரொஸ்டென் (Norostern).
எதிரி முனைகள்.-ஸிக்பிரட் (Siegfried) அரண்.
இரவு.—டார்ம்ஸ்டாட் (Darmstadt).
பேர்லின் (Berlin).
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

இதாலி (Italy).
ரஸ்தாப் பாலங்கள், பீரங்கி ஸ்தாபனங்கள், இதர இலக்குகள்.-வட இதாலி (N. Italy).
ரயில்வே லயன்கள், பாலங்கள், பீரங்கி ஸ்தாபனங்கள் போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).
விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).
விமான நிலயம்.—மெனாண்டோ (Menado), ஜப்பானிய விமான நிலயங்கள்.—ஹால் மஹேரா (Halmahera).

பர்மா (Burma).
துணைக்காவலோடு கூடிய ஜப்பானியக் கப்பற் கூட்டங்கள்.—ரங்கூன் (Rangoon).
பீரங்கி ஸ்தாபனங்கள்.-அரக்கான் (Arakan)
படகுகள்.-ஆக்யாப்பிற்கு (Akyab) வடகிழக்கு.
இலக்குகள்.—மாங்டி (Mangshih).
போக்குவரத்துகள்.-டிடிம் (Tiddim) ரஸ்தா.

12—9—44. (செவ்வாய்க்கிழமை).
ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—தொடர்சியான எண்ணெய்க் கிணறுகள்.—ஸ்கோல்வென் (Scholven), பூயெர்வான் (Buerwanne), ஸிக்கெல் (Sickel), டார்ட்மாண்ட் (Dortmund).
எதிரி வண்டிகள்.—மன்ஸ்டர் (Munster).
எண்ணெய்க் கிணறுகள்.-ருலந்து (Ruhland) போலென் (Bohlen), பிரக்ஸ் (Brux), மிஸ்பர்க் (Misburg), ஹெம்மிங்ஸ்டிட் (Hemmingstedt).
விமான இஞ்சின் இலக்குகள்.-கீலிற்கு (Kiel) அருகில்.
டெப்போ.—மாக்டிபிர்க் (Magdeburg).
இஞ்சின் தொழிற்சாலைகள்.—மியூனிச் (Munich).
இரவு.—லக்ஷியங்கள்.—பெர்லின் (Berlin), ஸ்டட்கார்ட் (Stuttgart), பிராங்பர்ட் (Frankfurt).

இதாலி (Italy).
எதிரி சைனியங்கள்.—பாலங்கள், போக்குவரத்துகள்.—போ (Po) சமவெளிப் பிரதேசம்.
பீரங்கி ஸ்தாபனங்கள், போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).
எதிரி விமான நிலயங்கள்.—தென் பர்மா (S. Burma).
பீரங்கி ஸ்தாபனங்கள் —அரக்கான் (Arakan).
பாலங்கள்.—மத்திய பர்மா (C. Burma).
ரஸ்தாப் பாலம்.—காலிவா (Kalewa) வின் மேற்கு.
மோட்டார் போக்குவரத்துகள்.-டிடிம் ரஸ்தா (Tiddim).
ரஸ்தா போக்குவரத்துகள்.-மான்ஷி (Mongshi) காலிவா (Kalewa).

13—9—44. (புதன்கிழமை).
ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—(53 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 36 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
தொடர்ச்சியான எண்ணெக்கிணறு ஸ்தாபனங்கள்.—மெர்ஸ்பர்க் (Merseburg), லட்ஸ் கெண்டார்ப் (Lutzkendorf), லட்விக் ஷாபன் (Ludwigshafen)-
டெய்ம்லர் பென்ஸ் (Daimler Benz), நிலயங்கள்.—ஸிண்டெல்பிங்கர் (Sindelfinger).
கவசம்பூண்ட வண்டிகள்.—உல்ம் (Ulm).

என்ணெய் சேமிப்பு டெப்போக்கள்.—வெய்ஸென்ஹார்ன் (Weissen Horn).
என்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—தென் ஜெர்மனியிலுள்ள ஆடர்டால் (Odertal), போலந்திலுள்ள ஆஸ்விட்ஸிம்(Osvitsim).
விமான நிலயம்.—ஆக்ஸ்பர்க் (Augsburg).
இரவு.—பெர்லின் (Berlin) (2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இதாலி (Italy).

ரயில்ரோட் பாலங்கள்.—வடக்கு இதாலி (N. Italy), போ(Po) சமவெளி.
தற்காப்பு சைனியங்கள்.—ரிமினி (Rimini), பிளாரென்ஸிற்கு (Florence) வடக்கு.
மோட்டார் ரயில் போக்குவரத்துகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).
கப்பல்கள்.-ஜினோவா வளைகுடா (Gulf of Genoa).
விமான நிலயங்கள்.—கிரீஸிலுள்ள ஏதென்ஸ் (Athens) பிரதேசம்.

கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—யுத்த அரங்கம் முழுவதும்.
ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்ட் (Budapest).

தூரக்கிழக்கு (Far East)

ஜப்பானிய சைனியங்கள்.—ஹால்மஹேரா (Halmahera), பாலா (Palau) தீவுகள்.

பர்மா (Burma).

ரயில்வே தளங்கள், களஞ்சியங்கள், படகுகள், ரயில்வே ஸ்டேஷன்.—மோல்மீன் (Moulmein).
சேமிப்புகள்.—மாண்டலே (Mandalay), லாஷியோ (Lashio) ரயில்வே.

14—9—44. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—பலமான இடங்கள்-பிரான்ஸிலுள்ள நான்ஸி (Nancy), மெட்ஸ் (Metz).
போக்குவரத்து இலக்குகள்.-ஹாலந்திலுள்ள ரயில்வேக்கள், நீர்ப்பாதைகள்.
பாதைகள்.—வால்செரென் (Walcheren) பியூலாந்து (Beueland).
தாக்கப்பட்ட நிலயங்கள்.—பொலோன் (Bulogne).
கப்பல்கள்.—ஹாலந்து (Holland).
இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

இலக்குகள்.—வடக்கு இதாலி (Northern Italy) யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
கப்பல்கள்.—ஜினோவா (Genoa) வளைகுடா.
விமான நிலயங்கள்.—கிரீஸிலுள்ள ஏதன்ஸ் (Athens)பிரதேசம்.

கிழக்கு அரங்கம் (Eastern Front).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

படகுகள் இதர லக்ஷியங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

15—9—44. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா. (Europe).

பகல்.-தற்காப்பு நிலயங்கள், டாங்கிகள், எதிரி பீரங்கிகள்—ஸீஜ்பிரையெட் (Siegfried) அரண்.
எதிர்ப் போக்குவரத்து சாதனங்கள்.—ஸீஜ்பிரையெட் (Siegfried)அரணுக்கு கிழக்கு.
இரவு.—கடற்படை தளம்—ஜெர்மனியிலுள்ள கீல் (Kiel).

இதாலி (Italy).

இலக்குகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்களிலுள்ள ரிமினி (Rimini) பிரதேசத்திலும்.
பாலங்கள், மோட்டார் போக்குவரத்துகள்.—போ (Po)சமவெளி.

கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.
ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்ட் (Budapest).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.-மாப்எங்கெட் (Mapanget).
கப்பல்.—மெனடோ (Menado).
ஜப்பானிய சைனியங்கள்.—ஹால்மஹேரா (Halmahera).

பர்மா (Burma).

ஜப்பானில் கட்டப்பட்ட நகரம்.—வான்லிங் (Wanling).
விமான நிலயம்.—பாக்காக்கு (Pakokku).
ரயில்வே ஸ்டேஷன்.—காதி (Kathi).
ரயில்வே இலக்குகள்.—மாண்டலே (Mandalay), ரெங்கூன் (Rangoon) ரயில்வே.

16—9—44. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—மோட்டார் போக்குவரத்துகள் ரயில்வே கார்கள்—ஸீஜ்பிரையெட் (Siegfried) அரண்.
போக்குவரத்து லக்ஷியங்கள்.—மோஸெல்லி (Moselle)சமவெளிப்பிரதேசம்.
கப்பல்கள்.—ஹாலந்து (Holland).
விமான நிலயம்.—ஹாலந்து.
இரவு.—விமான நிலயங்கள்.—ஹாலந்து, ஜெர்மனி.
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

### இதாலி (Italy).

**விரத துவியல்கள்.**—போலோனு (Bologna).

**எதிரி தற்காப்பு அரண்கள்.**-ரிமினி (Rimini)ப் பிரதேசம்.

**போக்குவரத்துகள், ரயில் லயன்கள், ரஸ்தாக்கள், மோட்டார் போக்குவரத்துகள்.**—யூகோஸ்லாவியா (Yugoslavia), இதாலியில் யுத்தம் நடக்கும் நடக்கும் பிரதேசங்கள்.

### கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front.)

**விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.**— யுத்த அரங்கம் முழுவதும். ஹங்கேரியும் தலைநகரான புடாபெஸ்ட் (Budapest).

### தூரக்கிழக்கு (Far East).

**விமான எதிரி.**—ஹால்மாராத்தீவில் தரைமீதுள்ள படைகள்.

**எதிரி சைனியங்கள்.**—பாலா (Palau) தீவு.

### பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**11—9—44.** (திங்கட்கிழமை) to
**14—9—44.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**15—9—44.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென்கிழக்கு இங்கிலாந்து (S. E. England).

லண்டன்.—(London) பிரதேசம்.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**16—9—44.** (சனிக்கிழமை) and
**17—9—44.** (ஞாயிற்றுக்கிழமை.

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East)

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**மரணவேதனைப்படும் போர்வீரன்.** "ஜெர்மனிக்கு உயிர் இன்னும் ஒரு நாள் நீடித்திருக்கும். ஜெர்மன் படைகள் சமாளித்து நிற்கும் ஒவ்வொரு நாளும் அற்புதமான நடவடிக்கையாகும்". 1944-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 28-ம் தேதி—பெர்லின் ஒலிபரப்பு.

"நாம் உற்பத்தி செய்த ஆயுதங்களாலேயே எதிரிகள் நம்மை முறியடிக்கிறார்கள். நமக்கு ஐச்வர்யக் குறைவு ஏற்பட்டு விட்டதால் இனிமேல் நாம் வெற்றிபெறுவது சாத்யமில்லை". டிட்மார்—1944-ம் வருஷம் செப்டம்பர் 5.

இவ்விதமாக நேசதேசப்படைகள் நாலாபக்கங்களிலும் வளைத்து வரும்பொழுது ஜெர்மனி புலம்பிக்கொண்டிருக்கிறது. அநேக வருஷங்களாக ஜெர்மனி செய்துவந்த டம்பத்தின் முடிவு இதுதான். வெற்றிக்குபின் தோல்வி பெற்று அழிந்து விடுவதென்பது கோரமானது. இனிமேல் ஜெர்மன் படைகள் பின்வாங்கி ஓடவேண்டுமேயல்லாது முன்னேறமுடியாது. இனிமேல் மின்னல் தாக்குதலையும் ஜெர்மனி செய்யமுடியாது. அதன் வலிமை குறைந்துவிட்டது. அதன் யுத்த தந்திரம் பயன்படவில்லை. அதன் ஆயுதங்கள் பிரயோஜனமில்லாமல் போய்விட்டன. யூ-படகு, விமானப்படை, டாங்கிகள், மற்ற ரகசிய ஆயுதங்கள் எல்லாம் உபயோகமற்றதாக ஆகிவிட்டன. அதன் தற்காப்பு நிலயங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நொருங்கிவிட்டன. கிழக்குப் போர்முனையில், நீபர், நீஸ்டர், சதுப்பு நிலங்கள், கோட்டைகள், மேற்குப் போர்முனையில் அட்லாண்டிக் அரண், ஸேன் நதி தற்காப்புகள், மோசல், ப்யூஸ், ஆல்பர்ட், எஸ்காட் கால்வாயகள்—முதலிய தற்காப்புகள் பயன்படவில்லை. ஜெர்மனிக்குள்ளிருக்கும் ஸீக்பிரட் அரண் தாக்கப்பட்டு ஊடுறுவிச்செல்லப்பட்டது. மற்ற ஜெர்மன் அரண்களைப்போல இந்த அரணும் நொருங்கிவிடும். ஆகனுக்குக் கிழக்கிலுள்ள ஸீக்பிரட் அரணின் சில பாகங்கள் போலி தற்காப்புகள் என்று சொல்லப்படுகிறது. "ஜெர்மனிக்குள் முன்னேறுங்கள். உங்களுக்கு நல்ல அதிருஷ்டம் உண்டாகட்டும். ஜெர்மனியில் நல்ல வேட்டை கிடைக்கும்" என்று பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரி படைகளுக்கு உத்தரவிட்டார்.

ஜெர்மனிக்குள் நேசதேசப்படைகள் நுழைந்துவிட்டதால் ஜெர்மனியின் பிரசாரத்வனியில் மாறுதல் ஏற்பட்டுவிட்டன. நேசதேசப்படைகள் ஜெர்மன் புண்ய பூமியில் அடிவைத்தவுடன் ஜால வித்தையால் ஏற்பட்டதுபோல் ஒவ்வொரு ஜெர்மானியரும் உயிரை அர்ப்பணம் செய்யவும், வெறி கொண்டு போர் புரியவும் தயாராகி விடுவான் என்று சொல்லப்படுகிறது. இதுவரையில் எடுப்பவர் கைப்பிள்ளையாக இருந்த ஜெர்மானியர்கள் இப்பொழுதுதான் நிலைமை மோசமாகிவிட்டதென்று கண்டு பிடித்திருக்கிறார்கள் .மனிதப் பிர்யத்தனத்தில்

இனிமேல் ஜெர்மனியைக் காப்பாற்ற முடியாதென்று அவர்களறிவார்கள். போர்வீரன் காயமுற்று மரணமடைய வேண்டியதுதான்.

சரித்திரத்திலேயே முதன்முதலாக இப்பொழுதுதான் ஜெர்மனி நன்றாய் முறியடிக்கப்படும். ஜீனா யுத்தத்தில் தோல்வியுற்ற பிரெடரிக் வில்லியம் III நெபோலியனுக்கு ஏராளமான பிரதேசங்களை அர்ப்பணம் செய்தார். 1800-ல் ஏற்பட்ட இந்தத் தோல்விக்கும் இப்பொழுது ஜெர்மனிக்கு ஏற்படப்போகும் தோல்விக்கும் இணை கிடையாது. சென்ற யுத்தத்தில் ஜெர்மனிக்குள் பிரவேசித்த ருஷ்யர்களின் நடவடிக்கைக்கும் இதை ஒப்பிட முடியாது. ஏனெனில் ருஷ்யர்கள் டானன்பர்க்கில் முறிபட்டுவிட்டார்கள். மான்செஸ்டர் கார்டியன் சொல்லுகிறபடி நேசதேசத்தார்கள் ஜெர்மனியைக் கூறு போட்டுவிட்டார்கள்.

வி வி வி வி வி

**க்விபெக்.** க்விபெக்கில் நடைபெற்ற ஜனாதிபதி ரூஸ்வெல்ட்—மிஸ்டர் சர்ச்சிலின் இரண்டாவது சந்திப்பு சனிக்கிழமையன்று முடிவடைந்தது. அதன் முக்யத்வம் பின்வருமாறு:—அநேக முக்கியமான முடிவுகள் சொல்ப காலத்திற்குள் செய்யப்பட்டன. அதிகமாக விவாதம் நடைபெறவில்லை. இதற்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது பரிபூர்ணமான ஒற்றுமை ஏற்பட்டது. ஜெர்மனிக்கான போர் முடிவு பெற்றவுடன் ஜப்பானைத் தாக்குவதென்ற திட்டம் வகுக்கப்பட்டது. பிரிடன் சார்பாக யுத்தத்தில் பிரிடனின் எல்லா படைகளையும் ஐச்வர்யங்களையும் ஈடுபடுத்துவதாக மிஸ்டர் சர்ச்சில் வாக்களித்தார். இப்பொழுது நேசதேசத்தாரின் படைபலம் ஓங்கிவிட்டதால் எவரவர்கள் பங்கெடுத்துக் கொள்ளவேண்டுமென்பதை விட யார் கடுமையாகப் போரை நடத்த வேண்டுமென்பதுதான் முக்கியத்வமுள்ளது. வெற்றியின் பலனை அமெரிக்கா ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட பிரியப்படுகிறார். மிஸ்டர் சர்ச்சிலுக்கு இதில் சம்பந்தமில்லை. கனடாவும் தன்னாலியன்றதைச் செய்து வருகிறது. ஆஸ்திரேலியா துடித்துக்கொண்டிருக்கிறது. சைனா சமயத்தை எதிர்பார்த்து நிற்கிறது. புத்துயிர் பெற்றுவரும் பிரான்ஸும் விடுதலை பெற்ற ஹாலந்தும் போருக்குத் தயாராகி வருகின்றன.

பிரிடன் தூரக்கிழக்குப் போரில் பங்கெடுத்துக்கொள்ளுமா என்ற சந்தேகத்தை மிஸ்டர் சர்ச்சில் அறிக்கை மூலம் நிவர்த்தி செய்துவிட்டார். இந்த விஷயத்துக்கு நேசதேசத்தாரிடையே அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறதென்ற நாஸிப் பிரசாரமும் அமெரிக்காவில் ஜனாதிபதி தேருதல் சம்பந்தமான புரட்சியும் ஜாக்கிரதையில்லாத பொய் வதந்திகளும் தான் காரணங்களாகும். அமெரிக்கர்களைப் போல பிரிடனுக்கும் பஸிபிக்கில் அக்கரைகள் உண்டு. பிரிடனின் நல்லெண்ணமும் பிரிடனின் கௌரவமும் காப்பாற்றப்படவேண்டும். தூரக்கிழக்கின் பத்திரத்தைப் பொருத்துத்தான் கிழக்கிலுள்ள பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் வலிமையும் நிலைபெற்றிருக்கும். பிலிப்பைன்ஸ் நஷ்டமும், பர்மா, மலேயா நஷ்டமும் நமக்கு ஒன்றுதான். சிங்கப்பூரை நாம் இழந்தது பெர்ல் துறைமுகத்தில் அமெரிக்கா பழுதுபட்டதுடன் ஒப்பிடக்கூடியதுதான்.

வி வி வி வி வி

**ஜெர்மனிக்குள் முன்னேற்றம்.** டச்சு எல்லைச்சரகத்திலிருந்து ஸ்விஸ் எல்லை வரையில் மூன்று பகுதிகளாக நேசதேசப்படைகள் ஜெர்மனிக்குள் முன்னேறுகின்றன. வடக்கில் ஜெர்மனி நம்பிக்கை வைத்திருந்த அரண்களான, ஆல்பெர்ட் கால்வாய் நேசதேச வசமாகிவிட்டது. மாஸ் நதியை நேசதேசப்படைகள் தாண்டிவிட்டன. டச்சுக் கால்வாய்க்கருகில் நேசதேசப்படைகள் விமான மூலம் இறங்கி விட்டார்கள். ரைன் நதியில் ஜெர்மானியர்கள் வெள்ளப்பெருக்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவைகளுக்குப்பின் ரைன் நதி அரண் இருக்கிறது. அதாவது கோலோன், ஆசன், டூயிஸ்பர்க் முக்கோணம். இதில் ஜனத்தொகை அதிகம். இங்கு 10 மிலியன் தொழிலாளர்களிருக்கிறார்கள்.

மத்தியப் பகுதியில் வேகம் பொருந்திய மோசல் நதி டிரியாவிலிருந்து காப்ளென்ஸ் வரையில் ஓடுகிறது. அதற்கு வடக்கில் ஏய்பெல் பீட பூமியிருக்கிறது. அதற்குப்பின் மெயின்ஸ் சார்பிருக்கன்—கால்ஸ்பர்க் முக்கோணத்தில் 2 மிலியன் தொழிலாளர்கள் வசித்து வருகிறார்கள்.

தெற்குப் பகுதியில் ரைன் நதிப் பள்ளத்தாக்கு பெல்போர்ட் வெளி வழியாக பிராங்க்பர்ட்டுக்குச் செல்லுகிறது. அதைச்சுற்றிலும் வாஸ்செஸ் நதியும் கருங்காடும் இருக்கின்றன. இந்தக் கோட்டின் வழியாகத்தான் ஜினாவிலிருந்த ஜெர்மன் சேனையை முறியடிக்க நெபோலியன் சென்றான்.

மேற்குப் போர்முனை பூராவும் 500 மைல்கள் நீளமுள்ளது. ம்யூஸ் நதியில் இருக்கும் நேசதேசப்படைகள் விமான மூலமாகவும், தரை மார்க்கமாகவும் ஹாலந்துக்குள் நுழைந்து

விட்டார்கள். மத்தியப் பகுதியில் நேசதேசப்படைகள் ஜெர்மன் எல்லையை ஆகன், யூபன், டிரியர்ஸ், பிரம் முதலிய இடங்களில் தாண்டி ஆகனுக்குள் போர்புரிந்து வருகிறார்கள். இந்தப் பிராந்தியத்தில் ஸீக்பிரட் அரண் எட்டு மைல்கள் அளவிற்குப் பிளக்கப்பட்டுவிட்டது. தெற்குப் பகுதியில் நான்ஸி விழுந்தது, மெட்ஸ் தாக்கப்படுகிறது. பெல்போர்ட் வெளி நொருக்கப்படுகிறது. தெற்குக் கோடியிலுள்ள ஆல்ப்ஸ் மலைப் பிரதேசத்தில் நேசதேசத்தார்கள் மாரியின் பள்ளத்தாக்கு வழியாக முன்னேறிவிட்டார்கள்.

தற்காப்புச் செய்யும் முறையில் ஜெர்மனி எல்லா இடங்களிலும் பலமான பதில் தாக்குதலைத் துவக்கிவிட்டது. இது பெரிய போராக மூளும். ரைன், டச்சுக் கால்வாய்களிருக்குமிடங்களில் அநேக புதிய தற்காப்புகளை ஜெர்மனி அமைத்துவிட்டது. கடற்கரையிலுள்ள படைகள் சாகும் வரையில் ஊக்கமாகப் போர் செய்யவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அவைகள் ஸீக்பிரட் அரணிலுள்ள நேசதேசப்படைகளுக்கு உதவி வராமல் தடுத்துவிடவேண்டும். இரண்டாவதாக ஜெர்மன் படைகள் திருத்தி அமைத்துக்கொள்ள அவைகளுக்கு அவகாசம் அளிக்கவேண்டும். மேற்குப் போர்முனையிலிருந்த படைகள் வாபஸ் செய்யப்பட்டுவிட்டன. ஜெர்மனிக்கு நேசதேசப்படைகளை வரவொட்டாமல் தடுக்கும் முயற்சியில் ஜெர்மனி 75 லக்ஷம் ஜனங்களை இழந்துவிட்டது.

வி வி வி வி வி

**ஜெர்மனியின் கிழக்கு எல்லைச் சரகம்.** இங்கும் நிலைமையில் நெருக்கடி காணப்படுகிறது. கிழக்குப் பிரஷ்ய எல்லைச் சரகத்திலிருந்து டான்யூப் வரையில் 600 மைல்கள் கொண்ட பிரதேசத்தில் ஜெர்மன் தற்காப்புகள் தாக்கப்படுகின்றன. ருமேனியா, பல்கேரியா, பின்லாந்து முதலிய நாடுகள் சரண் புகுந்தன. செம்படை ஸெகோஸ்லாவேகியா, யூகோஸ்லாவியாவுக்குள் புகுந்துவிட்டதாகவும், போலந்தின் தலைநகரமான வார்ஸாவின் பக்கத்திலுள்ள பிராகா பிடிபட்டதாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. நாரு—வார்ஸா—விஸ்டுலாப் போர்முனைதான் ஹிட்லரின் கிழக்கு அரண். இந்த அரணைக் கட்டுவதில் ஹிட்லர் ஏராளமான காங்கிரீட்டையும் எஃகையும் உபயோகப்படுத்தியிருக்கிறான். அதுவும் கூடிய சீக்கிரத்தில் விழுந்துவிடும்.

வி வி வி வி வி

**கோதிக் அரண் போர்.** எட்ரியாடிக் கடற்கரையில் ரிமினிக்குப்போகும் வழியில் கடும் போர் நடைபெறுகிறது. ரிமினி, போ நதிப் பள்ளத்தாக்குக்கும் லம்பார்டி சமவெளிக்கும் போகும் மார்க்கத்திற்கும் வாசற்படி போன்றது. நார்மண்டியில் கேயனைப்போல் ரிமினி முக்கியத்துவமுள்ளது. அது விழுந்துவிட்டால் கோதிக் அரணின் அச்சாணி முறிந்துவிடும். ஜெர்மனிக்குப் பகலிரவாக யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்யும் வடக்கு இதாலிய தொழிற்சாலைகள் நமது வசமாகிவிடும். தென் கிழக்கு பால்கன் நாடுகளிலிருந்தும் கிரீஸிலிருந்தும் பின்வாங்கிவரும், ஜெர்மன் ஆக்கிரமிப்புப் படைகளின் மார்க்கம் யூகோஸ்லாவியாவி-லும், ஆஸ்திரியாவிலும் அடைபட்டுவிடும். கிரீஸில் டிடோவின் படைகளுடனும், பிரான்ஸிலுள்ள ஜெனரல் பாட்சிடமுள்ள 7-வது சேனையுடனும், ஸ்பிசியா, ஜினோவா, டூரின் வழியாகவும், ஆல்ப்ஸ் மலை வழியாகவும் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும், பிரெஞ்சு எல்லைச் சாகத்திலுள்ள பொடேனியை 7-வது சேனை பிடித்துவிட்டதால் ஜெர்மன் படைகளுக்குப் பின்புறமிருந்து அபாயம் ஏற்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

**பசிபிக்.** பசிபிக்கில் கடுமையான போருக்கு ஆயத்தம் செய்யப்படுகிறது. ஒரு புறத்தில் குவாம், பொனின் தீவுகள் வழியாகவும் மற்றொரு புறத்தில் பிலிப்பைன்ஸ் தீவுகள் வழியாகவும் ஜப்பானைத்தாக்க ஆயத்தம் செய்யப்படுகிறது. பிலிப்பைன்ஸ் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த மிண்டானோத் தீவிலுள்ள டாவோவிலுள்ள துறைமுகத்தை ஜப்பான் காலிசெய்து வருகிறது. ஹால்மஹோராவில் நேசதேசப் படைகளிறங்கியபின் தெற்கிலும் கிழக்கு பசிபிக்கிலுமுள்ள ஜப்பானியப்படைகள் துணிக்கப்பட்டுவிட்டன.

வி வி வி வி வி

**சீன-பர்மா தொடர்பு.** வட பர்மாவிலுள்ள மியிட்கினாவும், சீன மாகாணமான யூனானிலுள்ள டெங்க்சங்கும், லங்க்லிங்கும் பிடிபட்டன. பர்மா ரஸ்தாவுக்கும், லேடோ ரஸ்தாவுக்கும் தொடர்பு ஏற்பட்டது. சைனாவுக்குப் போகும் தரைமார்க்கம் திறக்கப்பட்டது. வடக்கு பர்மாவிலும், சீன மலைகளிலும்

நேசதேசப்படைகள் முன்னேறுகின்றன. எங்குபார்த்தாலும் ஜப்பானியச் சவங்களும் காயம் பட்டவர்களும், சிதறுண்டு கிடக்கிறார்கள். எதிரிகள் அவசரமாகப் பின்வாங்கினார்களென்றும் அவர்கள் மலேரியா, பெரிபெரி வியாதிக்குட்பட்டார்களென்றும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டதென்றும் வெளியாகுகிறது.

வி வி வி வி வி

**பின்லாந்தின் யுத்த நிறுத்தம்.** பின்லாந்து கடைசியாக யுத்தத்தை நிறுத்திவிட்டது. மாஸ்கோவில் செப்டம்பர் 14-ம் தேதி முதல் 19-ம் தேதிவரையில் சமாதானப் பேச்சுகள் நடந்தன. ருஷ்ய பிரதிநிதியான M. மொலடோவும் மாஸ்கோவில் அயல்நாட்டு ஸ்தானிகராகயிருக்கும் ஸர் ஆர்கிபால்ட் கிளார்க்கரும் மற்ற ஐக்கிய தேசத்தார்களும் இதில் கலந்துகொண்டார்கள்.

யுத்த நிறுத்த ஷரத்துகள் பின்கண்டவை (1) பின்லாந்து 1940-ம் வருஷக் கோட்டுக்கு வாபஸாகவேண்டும். (2) பின்லாந்து ருஷ்யாவுக்கு போர்க்கலா தீபகற்பமுள்பட உள்ள பிரதேசத்தை 50-வருஷக் குத்தகைக்கு விட்டுவிடவேண்டும். (3) பெட்ஸாமோவை பின்லாந்து ருஷ்யாவுக்கு வழங்கவேண்டும். (4) பின்லாந்தின் தெற்கு, தென்மேற்கு பிரதேசங்களிலுள்ள வியாபார தளங்களை பின்லாந்து ருஷ்யாவிடம் ஒப்படைத்துவிட வேண்டும். (5) பின்லாந்து நேசதேசத்தார்களுக்கு சகலவிதமான ஒத்தாசையையும் செய்யவேண்டும். பின்லாந்திலுள்ள ஜெர்மன் படைகளை நிராயுதபாணிகளாக்கி அவைகளை நேசதேசத்தாரிடம் பின்லாந்து ஒப்படைத்துவிடவேண்டும். (6) நஷ்ட ஈடாக ஆறுவருஷ கடுவில் பின்லாந்து ருஷ்யாவுக்கு 300-மிலியன் டாலர்களைக்கொடுக்கவேண்டும்.

இதாலி, ருமேனியாவுக்குப்பின் மூன்றாவதாக பின்லாந்து நிபந்தனையற்ற சரணாகதி செய்து நேசதேசத்தார்கள் ஏற்படுத்திய யுத்த நிறுத்த ஷரத்துகளை ஒப்புக்கொண்டிருக்கிறது. ஐந்து வருஷகாலமாக பின்லாந்து நேசதேசத்தார்களுக்கு அபாரமான இன்னல்களை விளைவித்திருக்கிறது. அப்படியிருந்தும் நேசதேசத்தார்கள் தாராளமான ஷரத்துகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஐந்து வருடங்களில் 1939, 1941, 1944-ல் பின்லாந்தும் ருஷ்யாவும் போரில் ஈடுபட்டிருந்தன.

முதல் யுத்தத்தில் (1939-ம் வருஷம் டிசம்பர் முதல் 1940-ம் வருஷம் மார்ச்சு 15-வரையில்) ருஷ்யா, போலந்தின்பேரில் படையெடுத்தது. பின்லாந்து கடுமையாகப் போர் தொடுத்தது. ருஷ்யர்களிடம் ஏராளமான படைகளிருந்தன. கடைசியில் பின்லாந்து சமாதானம் செய்துகொண்டு ரிபாகி தீபகற்பத்தை ருஷ்யாவுக்குக்கொடுத்தது.

இந்த அவமானத்தை நினைத்துக்கொண்டு 1941-ம் வருஷத்தில் பின்லாந்து ஹிட்லருடன் நட்புக்கொண்டது. லெனின்கிராட் முற்றுகையில் அது பங்கெடுத்துக்கொண்டது. இதிலிருந்து ஒரு பயனும் ஏற்படவில்லை. அப்பொழுது பின்லாந்துடன் பிரிடன் போர் தொடுத்தது. அமெரிக்கா ராஜதந்திர உரவுகளை ரத்துசெய்து இந்த வருஷத்தில் ருஷ்யா, பின்லாந்துபேரில் படையெடுக்கும் தருவாயிலிருந்தபொழுது பின்லாந்து இரண்டுதடவைகளில் சமாதானத்தைக் கோரிற்று. ஆகிலும் ருஷ்யா விடுத்த சமாதான ஷரத்துகளை நிராகரித்தது. ஆகையால் ருஷ்யா படையெடுத்தது.

பின்லாந்தின் அக்கிரமங்களைக் கவனிக்கும்பொழுது நேசதேசத்தார்கள் தாராளமான ஷரத்துகளை ஏற்படுத்தியிருக்கிறார்களென்றுதான் சொல்லவேண்டும். குற்றவாளி என்று மதித்து பின்லாந்துக்கு நேசதேசத்தார்கள் சிக்ஷைவிதிக்க முயன்றிருந்தால் அதற்கு ஒருவரும் தடைசெய்யமுடியாது. பின்லாந்தின்பேரில் அவர்கள் பாய்ந்து அதைச் சின்னாபின்னப்படுத்தியிருக்கலாம். ஆனால், நேசதேசத்தார்கள் பின்லாந்தின் அமைப்பைக் குலைக்கப் பிரியப்படவில்லை.

ஆகிலும் நன்றியறிவற்ற முறையில் பின்னிஷ் பிரதம மந்திரி முணுமுணுக்க ஆரம்பித்துவிட்டார். ஷரத்துகள் கடுமையானவையென்றும், ஹிம்ஸை செய்கின்றவையென்றும், சாசுவதமான நல்லெண்ணங்களை உண்டுபண்ணுதென்றும் அபிப்பிராயப்படுகிறார். பின்லாந்தின் பழைய நடவடிக்கைகள் நம்பிக்கைக்குரியவை என்று அவர் சொல்லுவது விசித்திரமாயிருக்கிறது. சாத்யமானால் பின்லாந்து மறுபடியும் ஜெர்மனியுடன் சேர்ந்து கொள்ளுமென்று அவர் சொல்லுவது போல் தோன்றுகிறது. ஜெர்மனி என்ற ஒரு தேசம் இனிமேல் நிலைபெற்றிருக்காதென்றும், பின்லாந்து மறுமுறை கலகம் செய்தால் உடன்படிக்கை ஷரத்துகளின்படி பின்லாந்தின் தலைநகரமான ஹெல்சிங்கிக்குப் பத்து மைல்களுக்குள் எல்லைச்சரகம் பெற்ற ருஷ்யா, ஆரம்பத்திலேயே இந்தக் கிளர்ச்சியை நசுக்கி விடுமென்றும் பின்னிஷ் பிரதம மந்திரி அறிந்துகொள்ளவில்லைபோலும்.

# ஜெர்மனிய சண்டைக்கப்பல் "டிர்ப்பிட்ஸை" வேட்டையாடுதல்.

## கடல் விமானங்களின் பெரிய வெற்றி.

(ரியர் அட்மிரல் தர்ஸ்பீல்ட்).

பிரான்ஸுக்காக நடந்த போரின் கடைசி காலத்தில், பிரிடிஷ் கடற்படை ஜெர்மனியக் கப்பல்களைத் தாக்கி, மும்மரமாய் வேலை செய்தது. பிரெஞ்சு துறைமுகங்களிலிருந்து, ஜெர்மனிய ஆக்கிரமிப்பில் இருந்த கிழக்குத் துறைமுகங்களுக்குச் செல்லும் ஜெர்மனியக் கப்பல்கள் எல்லாம் தாக்கப்பட்டன. ஆனால் அந்த ஒரு இடத்தில் மட்டும் அவர்கள் மும்மரமாயிருந்து மற்ற இடங்களில் சும்மா இருக்கவுமில்லை. எங்கும் தீவிரமாய்த்தான் இருந்தார்கள்.

1000 மைல்களுக்கு மேல் வடக்கே, ஜெர்மன் யுத்தக் கப்பலான டிர்பிட்ஸ் ஆர்டிக்கிலேயே சண்டைக்கென விடப்படா விட்டாலும், கடல் விமானங்கள் ஏப்ரல் மாதம் 3-ம் தேதி தாக்கி, உபயோகத்திற்குப் பயனற்றதாய் செய்தபின், வெகுநாட்கள் கழித்து கடலில் விடப்பட்டதாக வதந்தி உண்டாயிற்று. இக்கப்பல் உபயோகமில்லாமல் இருந்த காலத்து, பிரித்தானிய கப்பற்படைகள், இதர இலக்குகளின் மேலும், நார்வேயில் உள்ள ஜெர்மானிய ஸப்ளைக் கப்பல்களையும், சில சமயங்களில் டிர்பிட்ஸையும், அதற்குச் செய்யப்படும் ரிபேர்களையும், அல்லது மிதக்கும் இலக்குகளையும் ஜெர்மன் சேமிப்புகளையும் தாக்கின. சண்டைகளுக்கு முன், அட்மிரல் ஸர் ஹென்ரிமூர், டிர்பிட்ஸை மீண்டும் தாக்கவேண்டும் என்றும் பிரிடிஷ் கடல் விமானத்தை இதற்கு உபயோகப்படுத்துவதெனத் தீர்மானித்தார். ஜெர்மனிய யுத்தக் கப்பலின் மீது நான்கு தாக்குதல்கள் செய்யப்பட்டன. இத்தாக்குதல்கள் செய்ய முடியாத காலத்து, இந்த லக்ஷியங்கள் தாக்கப்பட்டன.

### வேட்டை விமானங்களின் தாக்குதல்கள்.

ஏப்ரல் மாதத்தில் தாக்குதலின்போது ஒரு ஆச்சரியமான வெற்றி கிடைத்தது. அம்மாதிரி திரும்பவும் ஏற்படும் என்பது துர்லபம். ஜெர்மானியர்கள் மிகவும் எச்சரிப்பாயும்; முன்னேறிய முறைகளோடும், தற்காத்துக்கொண்டு வானத்தை புகையில்லாமல் செய்து கொண்டிருந்தனர். இந்நிலையிலும் காலநிலையும் ஒருவித சாதகமாயிருந்தது. இந்நிலையில் முதல் தாக்குதலின்போது குண்டுபோடும் விமானங்களுக்கு சாதகமில்லாமலிருந்த காலநிலை. எனவே வேட்டை விமானங்கள மட்டும் தாக்குதலுக்குச்சென்றன. இந்த சந்தர்ப்பத்தில் டிர்பிட்ஸுக்கு சேதம் என்று சொல்வதற்கு இல்லை. ஆனல் காஸ்ஸெல, கோல்விக் முதலிய இடங்களிலிருந்த ரேடியோ நிலயங்கள் நெருப்புக்கிரையாயின. ஜெர்மன் விமானங்கள் பல நாசமாக்கப்பட்டன. இரண்டு பெருங்கப்பல்கள் தீக்கிரையாயின. பல யு படகுகள் நாசமாயின.

அடுத்த தாக்குதலும் வேட்டை விமானங்களே செய்தன. இன்னும் 2 ரேடியோ ஸ்தாபனங்கள் நாசமாக்கப்பட்டன. இப்போதும் டிர்பிட்ஸுக்கு சேதம் என்று சொல்லுவதற்கு இல்லை. ஆனல் அதனருகிலுள்ள ஸப்ளைக் கப்பல் ஒன்று தாக்கப்பட்டது. தொடர்ந்த 3-வது நாள் குண்டுபோடும் விமானங்கள நடவடிக்கைகள் நடத்த முடிந்தது. எனினும், புகைத்திரையினூடே போரிட்டதால் டிர்பிட்ஸின்மேல் வெற்றி என்று சொல்ல இடமில்லை.

அதே சமயத்தில் செய்யப்பட்ட பரந்த தாக்குதலில், வேட்டை விமானங்கள், நார்விக் என்ற இனத்தைச் சேர்ந்த நாசகாரியை, ஜெர்மனிய நாசகாரியில் பெரிதானதும் புதிதானதுமான ஒன்று தீக்கிரையானது. பெரும் வியாபாரக் கப்பல்களும், டாங்கிகளும், கப்பல்களும் தாக்கப்பட்டு, கப்பல்களுக்கும் கடற்கரைகளுக்கும் சேதம் அதிகம்.

### நான்காவது தாக்குதல்கள்.

ஐந்து நாட்கள் கழித்து, ஆகஸ்டு 29-ந் தேதி நான்காம் தாக்குதல் நடைபெற்றது. மீண்டும் டிர்பிட்ஸுக்கு சேதம் காணப்படவில்லை. ஆனல் 3 பெரிய நாசகாரிகளும் பேர்விக் கடற்கரையின்மேல் உள்ள எண்ணெய்க்கிணறு ஒன்றும் தீக்கிரையாயிற்று. எதிரிக் கப்பல்கள் சேதம் இவ்வாறிருக்க, 5 ஜெர்மன் விமானங்களை நம் வேட்டை விமானங்கள் சுட்டுத்தள்ளின. நான்கு பறக்கும் படகுகள் நீரின்மேல் நாசமாக்கப்பட்டும், இரண்டு நிர்மூலமாக்கப்பட்டது. இதன்னியில் நிச்சயமாய் சொல்லமுடியாத எண்ணிக்கையுள்ள சேதங்கள் • தரைமேல் ஏற்பட்டது. 11 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை. H. M. S. பிகொர்டன் டார்பிடோவால் தாக்கப்பட்டது. அநேகமாய் முதல் நாளில் யு படகு இத்தாக்குதல் செய்திருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது.

இரண்டு விஷயங்களை இந் நடவடிக்கைகள் விளக்குகின்றன. முதலாவது யு படகுகள் பிரிடிஷ் கடற்படை நாசமாக்கியது, ஒரு வாரத்திற்கு மேல் ஜெர்மனிய கடற்படை தளத்தினின்றும் வெளியே நம் கடற்படை சென்றது. அதில் ஒருவன் இருந்தவர், நார்வீஜியாவின்

பக்கம்—யு படகுகளை நேசதேச விமானங்கள் சுட்டன—கப்பல் சொல்லுமோ என்று பயந்ததாகக் கூறினார்.

அடுத்தாற்போல் "ராணுவ முற்றுகையில்" ஏற்பட்டுள்ள மாறுதலாகும். 1914—18-ல் கடற்படை முறையைவிட இப்போது மாறுபட்டுள்ளது. சென்ற யுத்தத்தில் பிரிடிஷ் கடற்படை ஜெர்மன் கப்பல்களை அதன் தளங்களில் தாக்காமல் கடலில் விட்டே தாக்கியிருக்கின்றன. ஆனால் இன்று தளங்களிலேயே தாக்குதல் அதிகம்.

---

## ஸ்லோவேக்கியா குழப்பம் செய்கிறது.

### ஜெர்மனியின் எண்ணங்கள்.

(டைம்ஸ் பத்திரிகை).

ருமேனிய கக்ஷிமாற்றத்தினின்றும் டான்யூபிய சமவெளியில் நடவடிக்கைகள் மிகவும் மும்மரமாய் நடைபெறுகின்றது.

ஜெர்மானியர்களுக்கு எதிரியாய் ஸ்லோவேக்கியா என்ற இந்த சிறிய குடியரசு நாடு கலகம் செய்வதாய் ஸ்லோவேக்கியாவிலிருந்து வந்த செய்திகளின்மூலம் தெரிகிறது. 1939-ம்வரு மார்ச்சு மாதத்தில் ஸெக்கோஸ்லோவேக்கியாவின் சுதந்திரங்கள் யாவும் நாசமாக்கப்பட்டபின் ஹங்கேரிய அரசாங்கம் இதனை தன் வசப்படுத்திக்கொண்டது. பிறகு ஜெர்மானியர்கள் உள்நாட்டிலுள்ள குறைபாடுகளை லக்ஷியம் செய்யாமலும், ஸ்லோவேக்கிய பயங்களையும் லக்ஷியம் செய்யாமலும், எதிரிடையின்றி குயிஸ்லிங் ஆக்ஷியை ஸ்தாபித்தது.

ஜெர்மானியர்கள் அளித்த கார்ப்பேத்தியாவிலுள்ள ஜில்லாக்களை வைத்து பராமரிக்க முடியவில்லை. ஆனால் ஸ்லோவேக்கியர்களுடன் அவர்களுக்கு இருந்த கஷ்டம் இன்னும் அதிகமாகும். ஸெக்கோஸ்லோவேகியாவைவிட்டுச் செல்லாதவர்கள் ஒன்று சும்மாயிருக்க வேண்டும், இல்லையேல் சிறைவாசந்தான். எனவே அம்மக்கள் இப்புது ஜெர்மன் ஆக்ஷியால் ஸ்லோவேக்கிய ஏழைக் குடியானவர்களுக்கு ராஜீய க்ஷேமமும், பொருளாதார லாபமும் ஏற்படும் எனக் கருதுகின்றனர்.

எதிர்பார்த்தபடியே இந்த எண்ணங்கள் செவ்வனே நடைபெறவில்லை. ஸ்லோவேக்கியா சுதந்திரமடைந்த 6 மாதங்களுக்குப் பின் ஸ்லோவேக்கிய சேனைப்பகுதி போலிஷ் எல்லைக்குள் விட்டு மற்றொரு நாட்டை கவர உபயோகப்படுத்தப்பட்டது. 2 வருஷங்கள் சுமாராய் சென்றபின் ருஷ்யாவில் விடப்பட்ட அதிக நஷ்டம் ஏற்பட்டது. அதிலிருந்து ஜெர்மனிய தொழில், தாணிய கால் நடைவரிசைகளும், மக்களை ஜெர்மனிய படைப்பகுதிக்கோ அல்லது ஓரோரிடத்திற்கு அனுப்பவோ கட்டாயமாய் ராணுவத்தில் சேர்க்கப்பட்டது. ருஷ்யச் சேனையின் முன்னேற்றமும், லண்டனிலுள்ள ஸெக்கோஸ்லோவாக்கிய அரசாங்கத்தின் அறிவுறுத்தல்படியும், ஜெர்மனிய அரசாங்கத்தின்கீழ் ஏற்பட்ட அதிருப்திகளும் காரணமாய் இக்குழப்பம் ஏற்பட்டது.

இதுகாறும் நல்ல நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. ஜெர்மனிய போக்குவரத்து என ஒன்று துண்டு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு இப்போது ருஷ்யர்களிடமிருந்து தளவாடங்கள் கிடைக்கின்றன. பிரிடனிலிருந்து உதவி தருவதாய் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஸ்லோவேக்கியப்படைகள் முதலியன லண்டனிலுள்ள ஸெக்கோஸ்லோவேக்கிய அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதாய்ச் சொல்லியிருக்கிறது. அந்த அரசாங்கமும், மற்றைய பெரிய மூன்று நேசதேசங்களும் இந்த நடவடிக்கைகளையும் திட்டங்களையும் அறிகின்றன. குயிஸ்லிங்கினிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது. அவர்களிடையே மனோதிடம் குலைகின்றது. இந்தக் குழப்பத்தால் ஏற்கனவே ருஷ்ய-ருமேனியத் தாக்குதல்களால் அல்லலுறும் ஜெர்மானியர்களுக்கு இன்னும் அதிகமாய்க் கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

---

## இதாலியில் 8-வது சேனையின் போர்.

### ஐரோப்பியப் போரின் மகத்தான நடவடிக்கை.

(டெயிலி மெயில்).

பழைய விரோதியான எட்டாவது சேனையிடம் ஹிட்லருக்குத் தனிப்பட்ட வெறுப்பு இருக்கவேண்டும்.

இன்று மேற்கு ஐரோப்பாவிலுள்ள ஜெர்மன் படைகள் ஹாலந்துக்குள் பின்வாங்கி வருகின்றன. தெற்கு பிரான்ஸிலுள்ள 19-வது சேனை லையான்ஸுக்கு வடக்கில் 70 மைலுக்கு வந்துவிட்டது. கிழக்குப் போர்முனைப் படை டிரான்ஸில்வேனியாவுக்குள் பின் வாங்கி வருகிறது. இந்த சமயத்தில் இதாலியில் கோதிக் அரணை ஊடுருவிச் சென்றிருக்கும் 8-வது சேனையைத் தாக்க ஹிட்லர் முயற்சிக்கிறுனென்று சொல்லப்படுகிறது.

ஓய்வெடுத்துக் கொண்டு களைப்பாறியிருக்கும் 26-வது பான்ஸர் டிவிஷன் படைகளையும், பீரங்கிகளையும் கொண்டுவந்து குவித்து, துருப்புகளை நொருக்கி அதன்பின் மிசானோ நதிக்கு வடக்கில் கனேடியர்களைக் கடுமையாகத் தாக்கினான். இது பயன்படவில்லை.

சில படைகள் பிரான்ஸிலிருந்தும், ருஷ்யாவிலிருந்தும் கொண்டு வரப்பட்டன. 8-வது படை இப்பொழுது மிகவும் கோரமான போரை நடத்தி வருகிறது. எதிரியின் முற்றிலும் தெளிவான துருப்புகளும், வெகு தூரம் பரவிய தற்காப்புகளும் இங்கு இருக்கின்றன. இந்தப் படைகளை மற்ற முனைகளுக்குக் கொண்டு போக அவகாசம் இல்லை. மற்ற பிராந்தியங்களில் தோல்வி கிடைத்து விட்டதென்று அறிந்தபோதிலும் அவர்கள் இங்கு கடுமையாகப் போர் புரிகிறார்கள்.

ஆகிலும், எட்ரியாடிக் பகுதியில் முன்னேறி வரும் ஒன்றுபட்ட பிரிடிஷ், கனேடிய, இந்திய, போலீஷ் படைபலத்தையும், மேற்கில் பைஸாவைத் தாண்டி உறுதியுடன் முன்னேறி வரும் அமெரிக்கப் படையையும் அவர்கள் தடுக்க முடியவில்லை.

---

# ஜெர்மனியுடன் உறவை ரத்து செய்தபின் துருக்கியின் நடவடிக்கை.

## தனித்து நிற்கும் கொள்கை.

(வியனேர்ட் கிர்ஷன்.)

ஜெர்மனியுடன் துருக்கி கொண்டிருந்த ராஜ தந்திர, பொருளாதார சம்பந்தங்களை அது ரத்து செய்தபின் மெஜலிகள் ஓய்வெடுத்துக்கொண்டார்கள்.

மெஜ்லிகள் ஓய்வெடுத்துக் கொண்டதற்கும் சமீப காலத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கும் மாறுபாடுகள் காணப்படுகின்றன.

துருக்கி பூராவும் விளக்கணைப்பு முறைகள் நிலைபெற்று வருகின்றன. துருக்கியின் பிரதிநிதிகள் விடுமுறை நாட்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். பால்கன் நாடுகளிலிருந்து ஜெர்மன் படைகள் பின்வாங்குகின்றன என்ற அறிகுறிகள் தோன்றிய போதிலும், துருக்கியில் அவசர நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

துருக்கியின் நிலைமை மூன்றரை வருஷங்களுக்கு முன்னிருந்தது போலில்லை. நான் துருக்கிக்கு வந்தபொழுது நிலைமையை சீர்திருத்த வேண்டுமென்ற உறுதி இருப்பதைக் கண்டேன். அநேக நாட்களாக நடுநிலைமை வகித்த பின்னரும் உறுதியிருக்கிற போதிலும் தீங்குகளைக்கண்டு அதிக பீதி இருந்துவருகிறது. மூன்று வருஷங்களுக்கு முன்னிருந்தது போல இப்பொழுது நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை. மாத்சர்யத்தின் பேரில் ஜெர்மன் வெடி விமானங்கள் துருக்கியின் பெரிய நகரங்களைத் தாக்கி சொல்ப சேதத்தை விளைவிக்கக்கூடும். மூன்று வருஷங்களுக்கு முன் ஜெர்மனி துருக்கியை விழுங்கி இருக்கும். இந்தப் புதிய நிலைமை திருப்திகரமானது.

### துருக்கியில் விமான நடவடிக்கை

இதுவரையில் இரண்டு தடவை அபாய அறிவிப்புகள் ஏற்பட்டன. ஆகஸ்டு மாதத்தில் காலை 3-மணிக்கு இஸ்தான்பூலில் சங்குகள் ஒலித்தன. அபாயம் 15 நிமிஷம் நீடித்தது. பீரங்கிகள் சுடத் துவங்கின. இஸ்தான்பூலிலிருந்த பொதுமக்கள் விடியற்காலம் வரையில் ஒளிகளிலேயே பதுங்கியிருந்தார்கள். அவர்கள் அதிகமாகப் பீதியடையக்கூடியவர்கள். மறுநாள் இஸ்தான்பூல் கவர்னர் உத்தியோக முறையில் வெளியிட்ட அறிக்கையில் பிரிடிஷ் வெடி விமானத்தின் வருகையினின்றும் அபாய அறிவிப்பு செய்யப்பட்டதென்று சொல்லப் பட்டது. இதாலியிலிருந்து புறப்பட்ட அந்த விமானம் போலஸ்தியில் நடைபெற்ற ஆகாயப் போரில் பழுதுபட்டு பத்திரத்துக்காக சமீப தேசத்தை நாடி துருக்கியிலிறங்கிற்று. அதிலிருந்த ஏழு விமானிகள் காப்பாற்றப்பட்டார்கள். ஆனால் வெடிக்காத விமான எதிர்ப்பு வெடிகுண்டு இஸ்தான்பூலுக்கு அருகிலுள்ள ஷிஷ்லியிலுள்ள நெசவுத்தொழிற்சாலையிலுள்ள யந்திரங்கள் பேரில் விழுந்தது. தொழிற்சாலையில் வேலைசெய்து கொண்டிருந்த ஏழு ஸ்திரீகள் காயமுற்றார்கள். இந்த அறிக்கை பிரசுரமாகுமுன் மற்றொரு அபாய அறிவிப்பு செய்யப்பட்டது. இந்தத் தடவையிலும் போலஸ்தியிலிருந்து அங்கு வந்த பறக்கும் கோட்டை விமானத்தின் பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. மறுபடியும் ஒன்றும் சம்பவிக்கவில்லை. பொட்டல்களில் சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் மத்தியில் வெடிகுண்டுத் துணுக்குகள் விழுந்தன.

இப்பொழுது முதலிலிருந்த பரபரப்பு நின்றுவிட்டதால் ஜனங்கள் விளக்கணைப்பு முறைகளையும் நன்றாகப் பயன்படுத்தி வருகிறார்கள். சில இடங்களில் கான்கள் வெட்டப் பட்டும் புதிய நடவடிக்கைகள் கையாளப்பட்டு வந்த போதிலும் ஜெர்மனி நடவடிக்கைகளை துவங்கப் போவதில்லை.

ஜெர்மனியின் பிரமுகரான டாக்டர் பால்ஷ்மிட் ஒரு வாரத்தில் இரண்டு மாறுபாடான அபிப்பிராயங்களை வெளியிட்டார். துருக்கியுடன் உறவு ரத்தானபின் யுத்தம் மூளுமென்றும், சாவதானமாகத் துருக்கி யுத்தத்தில் இறங்கிவருகிறதென்றும் அவர் சொன்னார். வான் பேபன் பெர்லினுக்குத் திரும்பி வந்தபின், உறவு ரத்திலிருந்து யுத்தம் மூளுமென்பதில்லையென்றும், அந்தத் துறையில் ஜெர்மனி ஒரு நடவடிக்கையையும் ஆரம்பிக்காதென்றும் டாக்டர் ஷ்மிட் சொன்னார்.

## துருக்கியின் முடிவு.

ஜெர்மனி பதில் நடவடிக்கையை ஆரம்பிக்காதென்று நேசதேசத்தார்கள் எதிர் பார்த்து துருக்கியிடம் அவ்விதமே சொல்லி வந்திருக்கிறார்கள். சென்ற ஜனவரியிலும் இவ்விதம் சொல்லப்பட்டது. துருக்கி இதை நம்பவில்லை. ஜெர்மனி அப்பொழுது உபயோகமற்ற நடவடிக்கையைத்தான் கையாண்டிருக்கக்கூடும். துருக்கியின் செய்கையினால் என்ன விளைவுகள் ஏற்பட்டிருக்கிறனவென்று கவனிப்போம்.

உறவு ரத்தானதின்மூலம் தேருதலில் சுயநலத்தையும் கோரப்பட்டதென்று அமெரிக்காவின் ஸ்தானீகரான ஸ்டீன் கார்ட் அவருடைய சொந்த அபிப்பிராயத்தை வெளியிட்டதைத் தவிர, இந்த நடவடிக்கையை துருக்கி தானாகவே மேற்கொண்டதென்றுதான் அயல்நாடுகளில் அபிப்பிராயமிருந்து வருகிறது. ஆகஸ்டு 2-ம் தேதியன்று மெஜ்லிகளின் முன் பிரதம மந்திரி ஸரோஜாக்லு சொற்பொழிவாற்றியபொழுது பிரிடன்தான் துருக்கியைத் தூண்டிற்றென்று வெளியிட்டார். அவர் சொன்னது உண்மையாகிலும், எந்த சமயத்தில் உறவை ரத்து செய்யவேண்டுமென்று பிரிடனும் அமெரிக்காவும் வற்புறுத்தியதென்று அவர் சொல்லவில்லை. சென்ற மாரிகாலத்தில்தான் இந்தப் பேச்சு நடந்தது. ஏழு மாதங்களுக்குப் பின் அது பலிதமாயிற்று. நடுநிலைமை வகிப்பதில் துரந்தரராகயிருந்த நூமான்மென் மென்சியாக்லு அயல்நாட்டு வியவகார இலாகாவிலிருந்து நீக்கப்பட்டார். பிரிடிஷ் அமெரிக்க ராஜதந்திரம் அழகாகவும் அமைதியுடனும் நடைபெற்றது. பிரிடனும் அமெரிக்காவும் துருக்கியின் முடிவை ஆதரித்து அதற்காகத் தயார் செய்து வந்தன. ராணுவ முறையில் அவர்கள் ஒரு ஆயுத்தமும் செய்யவில்லை. பொருளாதார முறையிலும் கஷ்ட நிவாரண வேலையிலும் மகத்தான திட்டங்கள் நிறுவப்படுகின்றன. குரோம் ஸப்ளையை நிறுத்தி ஜெர்மனியுடன் வியாபாரத்தை நிறுத்துவதென்று துருக்கி முடிவு செய்தால் அதற்குத் தகுந்த பிரதிப் பிரயோஜனத்தை அளிப்பதாக இரண்டு மாதங்களுக்குமுன் மிஸ்டர் சர்ச்சில் ஆற்றிய சொற்பொழிவின் விளக்கமும் இதுதான்.

துருக்கியின் நடவடிக்கையினால் ருஷ்யாவுக்கு ஏற்பட்ட உணர்ச்சி தெளிவானது. உத்தியோக முறையில் வெளியாகும் பத்திரிகைகளில், ராஜதந்திர முறையில் தனியாக நிற்க துருக்கி பயப்பட்டதினால்தான் துருக்கி ஒரு முடிவுக்கு வந்ததென்று ருஷ்யா சொல்லி வருகிறது. ருஷ்யர்களின் அபிப்பிராயத்திலும் அபாரமான உண்மையிருக்கிறது. தனித்திருக்கவேண்டுமென்று எல்லோரும் துருக்கியை பயமுறுத்துகிறார்கள். இப்பொழுது அதன் நிலைமையை துருக்கி விளக்கிக்காட்டமுடியும்.

அங்காராவில் நீண்டகாலம் வசித்து உள்நாட்டு சிரமங்களை அறிந்த எவரும் துருக்கியைப் பற்றி கடுமையாகப் பேசப் பிரியப்படமாட்டார்கள். மத்தியக் கிழக்குக்குப் போகும் மார்க்கத்தை நிராயுதபாணியாகவும் ராஜதந்திரங்களை மட்டும் பெற்றது துருக்கி வழிமறித்ததென்பதை ஒருவரும் மறந்துவிட முடியாது. உசித காலத்தில் விடுத்த புத்தியைக் கேளாத துருக்கி போன்ற ஒரு நேசதேசத்தை நாம் மதிப்பது சிரமசாத்யமானது. இந்த புத்திமதிக்கு அது செவி கொடுத்திருந்தால் இப்பொழுது அதிக பிரயாசையுடன் கிடைக்கக்கூடிய லாபங்களை அப்பொழுது அது சுலபமாக அடைந்திருக்கலாம்.

## ருஷ்ய-துருக்கி சம்பந்தங்கள்.

துருக்கி தனிக்கப்படுகிறதென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. ருஷ்யாவுக்கும் துருக்கிக்குமுள்ள நடுநிலைமை ஒப்பந்தம் 1945-ம் வருஷம் நவம்பர் மாதத்துடன் முடிந்துவிடுகின்றது. இருதரப்பாரும் ஆறு மாதங்களுக்கு முன்பே மற்றொருவருக்கு எச்சரிக்கை அனுப்பிவிடலாம். துருக்கி அப்படி அனுப்பாது. ருஷ்யா அவ்விதம் செய்யுமா? துருக்கிக்கும் ருஷ்யாவுக்குமுள்ள சம்பந்தங்களை அபிவிருத்தி செய்வதில் தான் துருக்கியின் பூராக்கவனமும் செலுத்தப்படுகிறது. ஜெர்மனியுடன் உறவு ரத்தானபின் மெஜ்லிகள் ஒரு சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தார்கள். அதன் பிரகாரம் தண்டனையை அனுபவித்து வருகிறவர்களும், ராஜீய குற்றங்களுக்காகவும், சாரவேலைக்காகவும் பரிசீலனை செய்யப்பட வேண்டியவர்களுமான நேசதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் மன்னிப்பு வழங்கப்பட்டது. அவ்விதம் விடுதலைபெற்றவர்கள் எவர்கள் என்று கண்டுபிடிக்க முயன்றேன். 1942-ம் வருஷம் வஸந்த காலத்தில் பிராண்ட்ஸ் வான் பேபனைக் கொல்ல சதி செய்ததில் தண்டனை அடைந்த ஜியார் பாமலாவ், லியோனிட் கோர்னிலாட் என்ற இரு ருஷ்யர்களைத் தவிர மற்றெந்த தேசஸ்தரும்

அதில் காணப்படவில்லை. அவ்விருவர்களில் ஒவ்வொருவருக்கும் 16 வருடங்கள் 8 மாதங்கள் காவல் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அவர்கள் இரண்டு வருஷங்கள் ஐந்து மாதக் காவல்தண்டனையை அனுபவித்து விட்டார்கள். அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ருஷ்யாவின் தயவைச் சம்பாதிக்க துருக்கி செய்தவரும் பிரயத்தனங்களில் இதுவும் ஒன்றாகும்.

யுத்த அவசிய முறையில் துருக்கி தனித்துநிற்குமென்று தோன்றுகிறது. பால்கன் நாடுகள் ஒவ்வொன்றாக யுத்தத்திலிருந்து விலகிக்கொள்ள பிரியப்படுகின்றனவென்பது ஒரு சூசகம். ஆனால் அந்நாடுகளுடன் பேரம் செய்ய ஒருவரும் முன்வரவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக ஜெர்மானியர்கள் பால்கன் நாடுகளைக் காலிசெய்து வருகிறார்கள். அவர்கள் பூராவாக வெளியேறிவிட்டால், நேசதேசத்தார் உத்தரவிடும் எந்த ஷரத்துக்கும் அவர்கள் உட்படவேண்டியதுதான். ஜெர்மானியர்கள் பின்வாங்கிவருவதிலிருந்து, துணிக்கப்பட்டு அகப்படாமல் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று ஜெர்மனி பிரியப்படுகிறது. கிழக்கிலிருந்து ருஷ்யர்களும், இதாலியிலிருந்து பிரிடிஷ் அமெரிக்கப் படைகளும் ஒன்றுபட்டுத் தாக்க முயன்றால் ஹங்கேரியின் சமவெளிகளில் ஒன்று சேரக்கூடிய மகத்தான இடுக்கித்தாக்குதல் ஏற்படுமென்று ஜெர்மனி எதிர்பார்க்கவேண்டும். ஆகையால் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்ப வேண்டுமானால் ஜெர்மனி துரிதமாகப் பின்வாங்கவேண்டும்.

இந்த நடவடிக்கையில் துருக்கியின் ராணுவ ஒத்தாசை அவசியமில்லை. "பால்கன் நாடுகளில் மகத்தான ராஜிய நடவடிக்கைகள் நடைபெறும். மகத்தான போர்கள் நடைபெறாது" என்று ஒரு உற்று நோக்காளர் அபிப்பிராயப்பட்டார். அவன் தத்வதரிசி என்று தோன்றுகிறது. ஆகையால் இந்த சிக்கல்களில் துருக்கியைமாட்டி விடுவது சிரம சாத்தியமானது. ஆகையால் துருக்கியின் உருவான நடவடிக்கைகளை நாம் ஆராமா அறிந்து தான் சொல்லவேண்டும்.

---

## கிழக்குப் போர்முனையில் பிரதிகூலம்.

### பால்கன் நாடுகளில் நாஸிகளின் கதி.

(டெயிலி டெலகிராப்).

பால்டிக்கடல் முதல் மத்தியதரைக்கடல் வரையிலும் ஜெர்மன் படைகளுக்குப் பிரதிகூலமான சண்டை வியாபித்து வருகிறது.

சென்ற யுத்தத்துக்குப்பின் அஸ்கம் என்று புகழ்பெற்ற இடத்திற்குச் சமீபத்திலுள்ள பெரிய இருப்புப்பாதைப் பாலத்தை மார்ஷல் டிடோ சமீப காலத்தில் தகர்த்துவிட்ட பின் தெற்கு, மத்திய பால்கன் நாடுகளுக்குச் செல்லும் ஜெர்மன் சப்ளை மார்க்கங்கள் நொருங்கிவிட்டன. ஆஸ்திரியாவுக்கும், தெற்கு ஜெர்மனிக்கும் செல்லுவதற்கு மாஸிடோனியாவிலுள்ள வாசற்படியை பல்கேரியா இனிமேல் தற்காப்பு செய்யாது. ஜெர்மன் படைகளுக்கு உதவியாக ஹங்கேரியா புதிய படைகளைக் குவித்துவந்த போதிலும் ருஷ்யர்கள் கார்பேதியன் கணவாய்களைத் தாண்டி ஹங்கேரியின் சமவெளிகளுக்கு முன்னேறி வருகிறார்கள்.

ஹங்கேரியாவில் பீதிச் சின்னங்கள் அதிகரித்து வருகின்றன. யுத்தத்தின் இறுதி நடவடிக்கையைப்பற்றி புடாபெஸ்டுக்கு நிச்சய புத்தி உண்டாகிவிட்டது. அழியாப் பெயர் பெற்ற நார்வீஜியனான குவிஸ்லிங் ஒவ்வொரு தேசத்திலுள்ளவர்களும் ஹிட்லரை ஆதரிக்க வேண்டுமென்று விடுத்த வேண்டுகோள் ஹங்கேரியின் ரீஜண்டான அட்மிரல் ஹோர்தியின் மனதில் பதியவில்லை.

இதை விஞ ருஷ்யர்கள் வார்ஸாவுக்கும் கிழக்குப் பிரஷ்யாவுக்கும் மத்தியில் புதிய தாக்குதலைத் துவக்கி விட்டார்கள். விசாலமான போர்முனையில் கவசம்பூண்ட முஸ்தீப்புகளுடனும், விமானப்படை உதவியுடனும் கடும்போர் நடைபெறுகிறது. ருஷ்யர்கள் தெற்கு மார்க்கமாக ஊடுருவிச் சென்று கிழக்கு பிரஷ்யாவின் மத்திய பாகத்துக்கு முன்னேறுவதென்று உத்தேசித்திருக்கிறார்களென்று ஜெர்மனி அபிப்பிராயப்படுகிறது. ஜெர்மனி குறைவுபட்ட ஐச்வர்யங்களையும், மனிதபலத்தையும் உபயோகிக்கவேண்டியிருப்பதினால் ருஷ்யர்களின் தாக்குதல் பலமாயிருக்கிறதென்று அறிய வேண்டியிருக்கிறது.

---

## பிரிடிஷ் ரேடியோவின் எதிர்காலத்திய அற்புதங்கள்.

### வியாபாரத்துக்கும் வீடுகளுக்கும் சௌகரியம்.

(ஆசிரியர் *A. M.* லௌ.)

பத்து வருடங்களுக்கு முன் டாவண்ட்ரிக்கருகில் பிரிடனின் ஒலிபெருக்கு நிலயத்தில் சரித்திரப் புகழ்பெற்ற ஒரு சம்பவம் நடைபெற்றது. இங்குதான் மார்ச்சு மாதத்தில் ராபர்ட் வாட்ஸர்வாட் தலைமை வகித்த பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகள் விமானத்தின்

வருகையை சப்த அலைகள் மூலம் கண்டு பிடித்தார்கள். ரேடியோ லோகேடர் கருவிகளுக்கு அதுதான் அஸ்திவாரம். இந்த ரகசியம் 1941-ம் வருஷம் வரையில் காப்பாற்றி வைக்கப் பட்டிருந்தது. அதைப்பற்றி பீவர்ப்ரூக் பிரபு பின்வருமாறு சொல்லுகிறார். "இருட்டில் எதிரியைக் கண்டு பிடித்து அழிப்பது ரேடியோதான். மேக சஞ்சாரத்தில் எதிரியைக் கண்டு பிடிப்பதும் அந்தக் கருவிதான். எதிரியை அழிக்கக் குறிப்பிட்ட இடத்திற்கு சண்டை விமானத்தை அனுப்புவதும் ரேடியோதான்."

ஐந்து வருஷங்களாக பிரிடன் ரேடியோ லொகேஷன் கருவியை மிகவும் நுட்பமான முறையில் அமைத்துவிட்டது. லக்ஷியங்களை நிச்சயமாக இருட்டிலும், மூடுபனியிலும், பனியிலும், மேகங்களிலும் அது கண்டு பிடிப்பதென்பதுதான் அதன் உயர்வான தன்மை. உலகில் சமாதானம் ஏற்படும்பொழுது அதன் பூரா விவரங்களும் வெளிவரும்.

இதை சமாதான காலத்திலும் பயன்படுத்தலாம். குருடர்கள் சப்த மூலமாக விஷயங்களைப் பார்க்கலாம். கப்பல்களும், விமானங்களும் ஒன்று மற்றொன்றுடன் மோதிக்கொள்ளாமல் அது தடுத்துவிடும். லாயிட்ஸ் கம்பெனிக்காரர்கள் கடற்படைக்குச் செலவிடும் தொகையில் இதன் மூலம் ஒரு வருஷத்தில் மிலியன்கள் கணக்கான பவுன்களை மீதப்படுத்தலாம் என்று சொல்லுகிறார்கள். 1912-ல் பனிக்கட்டிகளில் மோதி மூழ்கிய டிடானிக் என்ற கப்பலைப்போலில்லாமல் அட்லாண்டிக்கில் செல்லும் சாமான் கப்பலை அது காப்பாற்றக் கூடும். அட்லாண்டிக் கடலை கப்பல்கள் துரிதமாகக் கடந்து செல்லவும் அது அநுகூலமளிக்கும்.

கேம்பிரிட்ஜிலுள்ள காவண்டிஷ் ரசாயன ஆராய்ச்சி சாலையிலுள்ள ஆசிரியர் ஸர் லாரன்ஸ்பிராக் அநேக மைல்கள் வரையில் பார்க்கக்கூடிய ரேடியோக் கண்ணைப்பற்றி பிரஸ்தாபித்திருக்கிறார். தேடு விளக்கைப்போல ரேடியோ விளக்கு அநேக மைல்கள் வரையில் ஜோதியை அனுப்பி தூரத்திலுள்ள தோற்றத்தைத் துலக்கிக் காட்டும். இதற்கு டிரான்ஸ்மிட்டர் தேவையில்லை. ஒருவரிடமுள்ள ஒலிபெருக்கும் பெட்டியே அந்தத் தோற்றத்தை அறிமுகப்படுத்தும்.

ரேடியோ லொகேஷனுக்கும், டெலிவிஷனுக்கும் சம்பந்தம் உண்டு. ரேடியோ லொகேஷனில் கொள்கை சுலபமாகயிருந்தாலும் அதை அமைப்பது மிகவும் சிக்கலானது. அதற்கு நிபுணர்கள் வேண்டும். பிரிடனை மறைமுகப்படுத்தும் வேலை நின்றவுடன் ஆயிரக் கணக்கான பிரிடிஷ் ஆடவர்களும், ஸ்திரீகளும் ஆராய்ச்சி ரசாயனசாலைகளுக்கும், ரேடியோ உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கும் சென்றுவிடுவார்கள். அந்த மேதாவிகள் யுத்த அனுபவத்தைக்கொண்டு வியாபாரத்துக்குரிய ரேடியோக்களையும், டெலிவிஷன் கருவிகளையும் உற்பத்தி செய்துவிடுவார்கள்.

யுத்த ஆரம்பத்தில் வடக்கு லண்டனிலுள்ள அலெக்ஸாண்ட்ரா அரண்மனையிலிருந்து வெளியிடப்படும் டெலிவிஷன் நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டன. தொழில் முறையில் பத்திரம் அவசியமாயிற்று. மனித பலச் சிக்கனமும் மற்றொரு காரணமாகும். ஆகிலும் ஆராய்ச்சி நின்றுவிடவில்லை. ரேடியோ லோகேஷனுக்குச் செய்யப்படும் ஒவ்வொரு வேலையும் டெலிவிஷனுக்கு உபயோகப்படும். டெலிவிஷன் பிரிடனில்தான் கண்டு பிடிக்கப் பட்டு பகிரங்கம் செய்யப்பட்டது. தொழில் முறையில் பிரிடன் தலைமை வகித்தது. அதன் நிபுணர்கள் தனிப்பட்ட முறையில் ஆராய்ச்சி செய்துவந்தார்கள். இங்கிலாந்தில் மற்றெல்லா தேசங்களையும்விட அதிகமான டெலிவிஷன் கருவிகளிருந்தன. யுத்தத்துக்குப்பின் இரண்டு வருடங்களுக்குள் இப்பொழுது நாம் கையாண்டுவரும் சிக்கன முறையின் பயனாக ஏராளமாக டெலிவிஷன் கருவிகள் தயாராகிவிடும்.

மின்சாரச் சுற்றலின் சுளுவாலும் உபயோகமுள்ள விலை குறைவுமான தளவாடங்களை உபயோகித்து உற்பத்தி செய்வதாலும் ஒரு டெலிவிஷன் கருவியை அநேகர் குறைந்த விலைக்கு வாங்கி விடலாம். புதிதாக ஒரு ரசாயனம் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால் நமக்குக் கிடைக்கும் விபரங்களும், விஷயங்களும் சிலாக்கியமாகயிருக்கும். பிரிடனில் ஒரு கணத்துக்கு 45 மிலியன் சப்த அலைகள் மூலம் தகவல்கள் அனுப்பப்பட்டு வந்தன. யுத்த காலத்தில் வர்ணமிட்ட படங்களை அனுப்புவதற்கும் முறைகள் கண்டு பிடிக்கப்பட்டன. இப்பொழுது கிடைக்கக்கூடிய டெலிவிஷன் 1939-ம் வருஷத்தைவிட அதிக முற்போக்கானதாக இருக்கும். உலகத்திலுள்ள மற்றெந்த கருவியையும்விட உயர்வானதாகயிருக்கும்.

இதை விட தரையில் டெலிவிஷன் தகவல்களைக் கொண்டுபோக நூதனமான கம்பிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் அவசியமானவை. ஏனெனில் டெலிவிஷன் தூரம் 70 முதல் 90 மைல்கள் வரையில் அதிகரித்தபோதிலும் தேசமெங்கும் அதைப் பரவச்செய்ய அநேக இடைவெளி ஸ்டேஷன்கள் தேவைப்படும்.

இந்தக்கம்பிகள் டெலிவிஷனுக்கு மட்டும் உபயோகப்படவில்லை. அவைகள் மூலம் டெலிபோன் சம்பாஷணைகளையும் நடத்தி வரலாம். சர்வ தேசங்களுக்குள் டெலிபோன்

மூலம் பேச்சு நடக்க சௌகரியமேற்படும். மேலும் ஒலிபெருக்குக்குள் மின்சாரக்கம்பிகள் மூலம் பரவக்கூடும். டெலிவிஷன் செய்திகளும், பிரிடனிலுள்ள உயர்தர மின்சார சக்தியுள்ள கம்பிகள் மூலம் அனுப்பப்படலாம்.

சப்தத்தை ஒலிபெருக்குவதில் விசேஷ மாறுதல்கள் ஏற்படவில்லை. யுத்த அனுபவத்தை ஒட்டி சப்தத்தை ஒலிபெருக்கும் கருவிகள் நுட்பமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. யுத்தத்துக்குப்பின் சப்த அலைகளை வேற்றுமைப்படுத்தும் ஒலிபெருக்குகளைக்கொண்டு நடுவில் குறுக்கிடும் தொந்தரவுகளை ஒழித்துவிடலாம். பொதுஜனங்களுக்குரிய ரேடியோ கருவிகளின் உற்பத்தி யுத்த ஆரம்பத்தில் நிறுத்தப்பட்டது. படைகளுக்காக மிலியன்கள் கணக்கான பெட்டிகள் தயாரிக்கப்பட்டன. அவைகளை துரிதமாகவும், சிறப்பாகவும் யுத்த அவசியத்துக்காக உற்பத்தி செய்யவேண்டியிருந்ததால் எல்லோரும் சிறந்த அனுபவமும் பெற்றிருக்கிறார்கள். யுத்தத்துக்குப்பின் குறைந்த செலவில் பொதுஜனங்களுக்கு ஏராளமான கருவிகளை அவர்கள் செய்து கொடுத்து விடுவார்கள்.

இலேசான பெட்டிகளைச் செய்வதில் அதிக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஒலிபெருக்கும் கருவியுள்பட 5 அல்லது 7 ராத்தல் கனமுள்ள பெட்டிகள் இப்பொழுது தயாரிக்கப்படுகின்றன. இவைகள் யுத்தத்துக்குப்பின் அதிக உபயோகமுள்ளதாகயிருக்கும். ஒரு வியாபாரி தன்னுடைய சட்டைப் பையிலும், சாமான் பெட்டியிலும் ஒரு கருவியை எடுத்துச்சென்று தனக்கும், தன்னுடைய ஆபீஸுக்கும் வரும் செய்திகளை அவன் அறிந்து கொள்ளலாம். உடனே சமீபத்திலுள்ள டெலிபோன் அமைப்புக்குச் சென்று அவனுடைய தகவல்களை அனுப்பலாம்.

அசைந்து செல்லும் ரயில் வண்டிகளிலிருந்து ரேடியோ டெலிபோன் செய்திகளை அனுப்பும் முறைகளும் சர்ச்சை செய்யப்படுகின்றன. ஆனால் ஒரு தடவையில் அப்படி அனுப்பப்பட்ட ஒரு தகவல் மூன்று நிலயங்களிலிருந்து பெயர்த்துச் சொல்ல வேண்டியதாயிற்று. எஞ்சின் ஓட்டிகளுக்கும், கார்டுகளுக்கும், கைகாட்டி அறையிலுள்ளவர்களுக்கும் ரேடியோ மூலம் போக்குவரத்து நடைபெறுகிறது.

ரேடியோ என்றால் சாதாரண மனிதன் சப்தத்தையும், படங்களையும் ஒலிபெருக்குவதென்று நினைக்கிறான். அத்துடன் எலக்ட்ரானிக்ஸ் விஞ்ஞான சாஸ்திரமும் யுத்த காலத்தில் பிரிடனில் அதிக முன்னேற்றமடைந்திருக்கிறது. அவைகளைப்பற்றி இங்கு விவரிக்க இடமில்லை.

அதிக மின்சார சக்தியுள்ள அலைகளை ரேடியோ மூலம் ஒலிபெருக்குவதற்கும், உஷ்ணப்படுத்துவதற்கும் உபயோகிக்கலாம். மின்சாரத்தைத் தடுக்கும் சாதனத்தை உஷ்ணப்படுத்தும்பொழுது அதை ஒரு கண்டென்ஸருடன் பிணைத்துவிடவேண்டும். கண்டென்ஸர் மின்சாரத்தை உண்டுபண்ணும் யந்திரத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும். உஷ்ணம் சாவதானமாக அந்த சாதனத்துக்கு ஏறும்.

இந்த முறைகள் தொழிற்சாலைகளில் கையாளப்படுகின்றன. சாதாரணமாக உஷ்ணப்படுத்தினால் பக்குவமாகாத ஜவ்வுகள் இதன் மூலம் சுலபமாக இளகிவிடுகின்றன. மரங்களைச் சேர்த்து ஒட்டவும், அதன் மூலம் பலகைகளைத் தயார் செய்து மஸ்கிடோ விமானங்களைக் கட்டவும் சாதகம் ஏற்படுகிறது. உணவுப் பொருள்கள் துரிதமாகத் தயாரிக்கப்படலாம். மரத்தை உலரச் செய்வதற்கும், தோலைப் பதப்படுத்துவதற்கும் அதை உபயோகிக்கலாம். உலோகங்களை உருக்கிவிடலாம்.

மற்றொரு முறையிலும் எலக்ட்ரானிக்ஸ் பயன்படுகிறது. காற்றிலுள்ள சிறிய கருவிகள், பொடிகள் இழுக்கப்படுகின்றன. இந்தக் கருவியுள்ள ஒரு அறையில் தூசியே இருக்காது. தூசிகள் கருவியின்பேரில் படிந்துவிடும். அதை நாம் சுத்தி செய்யவேண்டியது. இதே விதமாக புகையிலுள்ள அழுக்குகளையும் இழுத்துவிடலாம். கரடுமுரடான பரப்புகளில் வர்ணத்தைப் பூசுவதற்கும் அதை உபயோகிக்கலாம்.

தொழிற்சாலைகளிலும் ரேடியோ மூலம் அநேக சாதகங்கள் ஏற்படுகின்றன. அவைகள் தொழிலாளர்களுக்கும், உலகத்தார்களுக்கும் பொழுதுபோக்குவதிலும், சங்கீதத்தைப் பரவச்செய்வதிலும் உபயோகப்படுகின்றன.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

# மின்சார பல்புகள்—விற்கவேண்டிய விலை.

## 27—8—44உ முதல் ஈ-தர்பாரின் விளம்பரம்.

| நம்பர். | அளவு. | ரகம். | இறக்குமதி செய்யப்பட்டதும் உள்நாட்டில் உண்டாக்கப்பட்டதுமான காஸ்மான், கிராம்டன், மால்டா, ஆஸ்ராம், பிலிப்ஸ், ராயல், எடிஸ்வான், ஸீமென்ஸ். | | பெங்கால் எலெக்ட்ரிக் தொழிற்சாலை பல்புகள், லக்ஸ் லாம்ப் தொழிற்சாலை பல்புகள், ரேடியோ லாம்ப் தொழிற்சாலை, மைசூர், காய்ஸ், கல்கத்தா, ஆசியா, பாரத் லாம்ப் தொழிற்சாலை பல்புகள். | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | |
| | | | வியாபாரிகளுக்கு கொடுக்கவேண்டிய விலை டஜன் 1-க்கு. | சில்லரை பல்ப் விலை 1-க்கு. | வியாபாரிகளுக்கு கொடுக்கவேண்டிய விலை டஜன் 1-க்கு. | சில்லரையில் பல்பு 1-க்கு விலை. | |
| | | | ரூ. அ. ப. | ரூ. அ. ப. | ரூ. அ. ப. | ரூ. அ. ப. | |
| 1 | 5 முதல் 10 வாட் | வாக்கூம் | ... | ... | 21 9 7 | 2 4 0 | 5 வாட். |
| | | | | | 20 6 5 | 2 2 0 | 10 வாட். |
| 2 | 15 „ 25 „ | „ | 11 14 6 | 1 5 0 | 19 3 2 | 2 0 0 | |
| 3 | 40 „ | „ | 12 12 0 | 1 7 0 | 20 6 5 | 2 2 0 | |
| 4 | 5 „ 60 „ | „ | ... | ... | 21 9 7 | 2 4 0 | 50 வாட் முதல் 60 வாட் வரை. |
| 5 | 30 „ | காஸ் நிரப்பப்பட்டது. | ... | ... | 24 0 0 | 2 8 0 | |
| 6 | 40 „ | „ | 14 4 0 | 1 9 0 | 21 9 7 | 2 4 0 | |
| 7 | 60 „ | „ | 15 5 3 | 1 11 0 | 24 0 0 | 2 8 0 | |
| 8 | 75 „ | „ | 19 0 6 | 2 2 0 | 28 12 10 | 3 0 0 | |
| 9 | 100 „ | „ | 21 9 0 | 2 6 0 | 38 6 5 | 4 0 0 | |
| 10 | 150 „ | „ | 38 3 3 | 4 4 0 | 60 0 0 | 6 4 0 | |
| 11 | 200 „ | „ | 57 10 6 | 6 7 0 | 86 6 5 | 9 0 0 | |
| 12 | 300 „ | „ | 79 10 3 | 8 14 0 | 120 0 0 | 12 8 0 | |

குறிப்பு:—மேற்கூறிய விலைகள் சாதாரணமான வோல்டுகள் அடி 110 முதல் 120 வோல்ட்டுகள் வரையிலும், 220 முதல் 250 வோல்டுகள் வரையிலும் கண்ணாடி பல்பு சப்ளை விலையைத்தான் கட்டுப்படுத்தும். வர்ணம் பூசப்பட்டும், அல்லது 'வாங்குபவரின் தேவையைச் சரிப்படுத்தும் படியானதுமான பல்புகளுக்கு இவ்விலைக்கட்டுப்பாடு பொருந்தாது.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 216. (2-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23- 9-44 | கீழ சன்னதி சந்து | ... மாலை 7.00 | 26- 9-44 | விராச்சிலை | ... மாலை 7.30 |
| 24- 9-44 | பூவரசகுடி | ... „ 7.00 | 28- 9-44 | நல்லூர் | ... „ 7.00 |
| „ | வேங்கடக்குளம் | ... „ 7.30 | „ | மாத்தூர் | ... „ 7.30 |
| 25- 9-44 | வெங்களூர் | ... „ 7.00 | 29- 9-44 | பனையப்பட்டி | ... „ 7.00 |
| „ | கோனுபட்டு | ... „ 7.30 | „ | ராங்கியம் | ... „ 7.30 |
| 26- 9-44 | நச்சாந்துபட்டி | ... „ 7.00 | | | |

### பிரஸங்கம் 217. (3-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30- 9-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 4-10-44 | ராமச்சந்திரபுரம் | ... மாலை 7.00 |
| 1-10-44 | சூரக்காடு | ... „ 7.00 | „ | ராயவரம் | ... „ 7.30 |
| „ | கோட்டைக்காடு | ... „ 7.30 | 5-10-44 | வானரமாணிக்கம் | ... „ 7.00 |
| 2-10-44 | தென்னதிரயன்பட்டி | ... „ 7.00 | „ | எம்பல் | ... „ 7.30 |
| „ | விசலூர் | ... „ 7.30 | 6-10-44 | விராலிமலை | ... „ 7.00 |
| 3-10-44 | மழையூர் | ... „ 7.00 | „ | பொருவாய் | ... „ 7.30 |
| „ | கரம்பக்குடி | ... „ 7.30 | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 23— 9—44 | வெட்டம்விடுதி. | 30— 9—44 | பொன்னமராவதி. |
| 24— 9—44 | எம்பல். | 1—10—44 | விராச்சிலை. |
| 26— 9—44 | குடுமியாமலை. | 3—10—44 | பேராம்பூர். |
| 28— 9—44 | ஆலங்குடி. | 5—10—44 | குழிபிறை. |
| 29— 9.—44 | புதுக்கோட்டை. | 6—10—44 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—29-9-44.